உ

கடவுள் துணை.

மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர்

கணிமேதாவியார்

அருளிச்செய்த

திணைமாலை நூற்றைம்பது

மூலமும் உரையும்

இரண்டாம் பதிப்பு.

சேதுஸம்ஸ்தான வித்வானும்

"செந்தமிழ்"ப்பத்திராசிரியருமான

ரா. இராகவையங்காரால்

பதிப்பிக்கப்பெற்றன.

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

"செந்தமிழ்"ப்பிரசுரம்.—௪௧.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1927.

உ

கடவுள் துணை.

மதுரைத்தமிழாசிரியர் மாக்காயனார்மாணாக்கர்

கணிமேதாவியார்

அருளிச்செய்த

திணைமாலை நூற்றைம்பது

மூலமும் உரையும்

[இரண்டாம் பதிப்பு.]

சேதுஸம்ஸ்தான வித்வானும்

"செந்தமிழ்"ப் பத்திராசிரியருமான

ரா. இராகவையங்காரால்

பதிப்பிக்கப்பெற்றன.

"செந்தமிழ்"ப் பிரசுரம்.—அ.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1927.

ஸ்ரீ:

முகவுரை.

திணைமாலை நூற்றைம்பதென்பது தமிழில் நல்லிசைப்புலவர்செய்த பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு எனப் பெயர் சிறந்த பெருநூல்வகையுட் கீழ்க்கணக்கின்பாற்படுவதொன்று. கீழ்க்கணக்குநூல்கள் ௧-நாலடி, ௨-நான்மணிக்கடிகை, ௩-இனியதுநாற்பது, ௪-இன்னாநாற்பது, ௫-களவழிநாற்பது, ௬-கார்நாற்பது, ௭-ஐந்திணையைம்பது, ௮-ஐந்திணையெழுபது, ௯-திணைமொழியைம்பது, ௧௦-திணைமாலைநூற்றைம்பது, ௧௧-திருக்குறள், ௧௨-திரிகடுகம், ௧௩-ஆசாரக்கோவை, ௧௪-பழமொழி, ௧௫-சிறுபஞ்சமூலம், ௧௬-முதுமொழிக்காஞ்சி, ௧௭-ஏலாதி, ௧௮-கைந்நிலை என இவை; இதனை,

*"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பாஃகடுகங் கோவை பழமொழி—மாமூல
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்னும் வெண்பாவினா லறிந்துகொள்க. நானாற்பதைந்திணை என்புழி நானாற்பது, நாலைந்திணை எனவுரைக்க. கீழ்க்கணக்கு, நாலடி.......... மெய்ந்நிலைய காஞ்சியோடு ஏலாதி கைந்நிலையவாம் என்ப: என்க. கணக்கு-மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என இருவகைப்படும். ஐம்பதுமுதல் ஐந்நூறிறுதியாக ஐவகைப்பாவானும்வருவது மேற்கணக்கெனப்படும். அவ்வகையெண்ணில் அறம்பொருளின்பங்களைப்பற்றி வெண்பா ஒன்றானே வருவது கீழ்க்கணக்கெனப்படும். இவற்றிற்கிலக்கணம்;—

"மேல்கீழ்க் கணக்கென விருவகைக் கணக்கே"

"மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே"

"அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
மிகுத்துடன் றொகுப்பது மேற்கணக் கெனவும்

---

* இவ்வெண்பா, "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப், பால்கடுகு கோவை பழமொழி—மாமூல, மின்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே, கைந்நிலைய தாகுங் கணக்கு" என ஆழ்வார்திருநகரியிற் கிடைத்த பழையதோர் திருக்குறளுரையேட்டின்முகத்து எழுதப்பட்டுள்ளது. இப்பாட்டு ஐந்திணையென்பது ஐந்து திணைநூல்கள் என்க; அவை ஐந்திணையைம்பது முதலிய நான்கும் கைந்நிலையும் ஆம். "இன்னிலையகாஞ்சியோடேலாதியென்பதூஉம், கைந்நிலையுமாகுங்கணக்கு" என்று பின்னர்க்கிடைத்தபிரதியி லுள்ளது.

வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே"

"ஐம்பது முதலா வைந்நூ றீறா
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும்"

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்"

எனவரும் பன்னிருபாட்டியற்சூத்திரங்களா னுணர்க. கீழ்க்கணக்கிற்கு வெண்பாவேயன்றி அதனினமும் ஆம் என்பது முதுமொழிக் காஞ்சியில் "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா—மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை" என வெண்செந்துறை வந்தவாற்றா னறிக. மேற்கணக்கிற்கே "ஐம்பது முதலா வைந்நூ றீறா" எனவும் "பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா" எனவும் சிறுமைக்கும் பெருமைக்கும் எண்வரையறைகூறிக் கீழ்க்கணக்கிற்கு "அவ்வகை யெண்பெறின்" எனவும் "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி" எனவும் ஒழிந்தமையாற் கீழ்க்கணக்குச் சிறுபான்மை ஐம்பதிற்குறைந்தும் ஐந்நூற்றின்மிக்கும் வருமெனக் கொள்க. இனியது, இன்னா, களவழி, கார் நான்கும் ஐம்பதிற் குறைந்து வந்தன. முப்பால் ஐந்நூற்றின் மிக்குவந்தது. இக்கீழ்க் கணக்கு நூல்களையே தாயபனுவல் என்னும்பெயராற் கூறுவர் எனவும், இவை அறம்பொருளின்பமென்னு மூன்றற்கு மிலக்கணஞ்சொல்லுவ எனவும், வேறிடையிடை அவைபன்றியுந் தாஅய்ச்செல்வது முண்டெனவும், இச்செய்யுட்கள் அடிநிமிராது இரண்டடிமுதல் ஆறடியிறுதி யாகவருவன எனவும், அவை எழுத்தினானகன்றுகாட்டாது சில எழுத்தினான்வருவன எனவும், அவை பென்னுச்சுருங்கிச் சிலவாகவருவன எனவும், "வனப்பியறானே" என்னுஞ் செய்யுளியற்சூத்திரத்துப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் உரைத்தவாற்றா னுணர்ந்துகொள்க. "சின்மென மொழியாற் றாய பனுவலோ-டம்மை தானே யடிநிமிர் பின்றே" என்று தொல்காப்பியநெறியே போற்றி இப்பன்னிருபாட்டியற்கண்ணும், "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி" எனக் கூறியதூஉங் காண்க. இக்கீழ்க்கணக்குநூல்களெல்லாம் வெண்பாவான் முடிந்தன என்பது பின்னோர் எனக்குக்கிடைத்துள்ள கீழ்க்கணக்குப் பழைய *ஏட்டினுள்ள,

* இவ்வேடு மழவராயனேந்தல் வித்துவான் சின்னஸ்வாமி ஐயரவர்களுடையது. செங்கையிலுள்ள யாழ்ப்பாணம் ஸ்வாமிநாதபண்டிதரவர்கள் நல்லுதவியாற் கிடைத்தது.

"மாப்புலவ ரெல்லாரும் மாக்கூடற் கண்ணிருந்து
பாற்படுத்த தென்றமிழின் பாநான்கின்—வாய்ப்புடைத்தாய்ப்
பண்பாய்ந் துரைத்த பதினெட்டுக் கீழ்க்கணக்கும்
வெண்பாவின் பாலுரைத்தார் மிக்கு."

என்னும் வெண்பாவா னறியப்படுகின்றது. இவ்வேட்டுப்பிரதியி னிறுதியில் "பதினெண்கீழ்க்கணக்குமாகப் பாட்டு ௩௲௨௱௫௰" என்று வரையப்பட்டுள்ளது. இத்தொகைக்கு வகை வருமாறு:—

௧.	சைநமுநிவர் நாலடி	௪00
௨.	விளம்பிநாகனார் நான்மணி	௧00
௩.	கபிலர் இன்னா	௪0
௪.	பூதஞ்சேந்தனார் இனியவை	௪0
௫.	மதுரைக் கண்ணங்கூத்தனார் கார்	௪0
௬.	பொய்கையார் களவழி	௪0
௭.	மாறன்பொறையனார் ஐந்திணை	௫0
௮.	மூவாதியார் ஐந்திணை	௭0
௯.	சாத்தந்தையார்மகனார் கண்ணம்பூதனார் திணைமொழி	௫0
௧0.	மதுரைத்தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார் திணைமாலை	௧௫0
௧௧.	திருவள்ளுவர் முப்பால்	௧௩௩0
௧௨.	நல்லாதனார் திரிகடுகம்	௧00
௧௩.	பெருவாயின்முள்ளியார் ஆசாரக்கோவை	௧00
௧௪.	முன்றுறையரையனார் பழமொழி	௪00
௧௫.	மாக்காரியாசான் சிறுபஞ்சமூலம்	௧00
௧௬.	மதுரைக் கூடலூர்கிழார் முதுமொழிக்காஞ்சி	௧00
௱.	மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார்மாணாக்கர் கணிமேதாவியார் ஏலாதி	௮0
வு.	மாறோகத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடனார் கைந்நிலை	௬0
		௩௲௨௱௫0

இங்குக் காட்டிய வகைகொண்டு திணைமாலை நூற்றைம்பது கீழ்க்கணக்கு நூல்களு ளொன்றாதலும், இந்நூல் ஏலாதி நூல்செய்த கணிமேதாவியாராற் செய்யப்பட்டதென்பதும், அவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார்மாணாக்கரென்பதும் உணரப்படும். அகத்திணை யொழுங்கினையுடைய நூற்றைம்பதுவெண்பாக்களுக்குக்குறையாகா மிகுதலாற் றிணைமாலை நூற்றைம்பதெனப் பெயர்சிறந்ததாகும். ஏலாதி நூலுள்,

> "இல்லறநூ லேற்ற துறவறநூ லேயுங்காற்
> சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து—நல்ல
> வணிமேதை யாய்நல்ல வீட்டுநெறியுங்
> கணிமேதை செய்தான் கலந்து"

என ஓர் சிறப்புப்பாயிரங் காணப்படுதலாற் கணிமேதாவியார் இல்லறவின்பப்பகுதிபற்றி நூல்செய்தமை புலப்படுகின்றது. அந்நூல் இஃதாகும். இந்நூலுட் டிணைவைப்புமுறை குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என வுள்ளது. உச்சிமேற்புலவர்கொ ணச்சினார்க்கினியர் தொல்காப்பிய வுரைக்கட் பலவிடத்தும் இந்நூலை எடுத்துக்காட்டிச் சேறலா னிதன் பழமையும் பெருமையும் நன்குணரலாகும். ஆளுடைய வடிகள் தம் திருச்சிற்றம்பலக்கோவையாரில் இந்நூற் சொல்லும் பொருளும் எடுத்தாளுதல் இந்நூல் ௮௬-ஆம் பாட்டையும் அதன் கீழ்க் குறிப்பையும் நோக்கித் தெளிந்துகொள்க. இந்நூலுட் "கோடாப் புகழ்மாறன் கூட லனையாளை" (௪) என வருவதுகொண்டு இவ்வாசிரியர் பாண்டியனிடத்தும் அவனுடைய கூடற்பதியிடத்தும் அன்புள்ளவ ரென்று துணியலாகும். இந்நூற்குப் பழையவுரை ௧௨௬-ம் பாடல் வரையே பூர்ணமாகவுள்ளது. இவ்வுரை மிகவு மினியதோர் பொழிப்புரையாகும். அகத்திணைபற்றிய பெருநூற்பொருள்களை எளிதி லறிதற்கு இக்கீழ்க்கணக்கின்கண் அகத்திணை பற்றியுள்ள திணைநூல்கள் இன்றியமையாதனவாத லொருதலை. கீழ்க்கணக்கின்பாற்பட்டவற்றுள் இன்னும் அச்சிடப்படாதனவும் இத்தமிழ்ச்சங்கவாயிலாக விரைவில் வெளியிடலாகும்.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்.

கடவுள்துணை.

கணிமேதாவியார்

அருளிச்செய்த

திணைமாலை நூற்றைம்பது

மூலமும் உரையும்.

க.—குறிஞ்சி.

க. *நறைபடர் சாந்த மறவெறிந்து நாளா
லுறையெதிர்ந்து வித்திய வூழைற் —பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாண்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன வீண்டு.

என்பது தலைமகளுந் தோழியும் ஒருங்கிருந்தவழிச் சென்று தலைமகன் தோழியை மதியுடம்படுத்தது.

இதன் பொருள். நறைக்கொடி படர்ந்துயர்ந்த சந்தனங்களை அறவெட்டி நல்லநாளால் மழைபெய்யுங்காலத்தையேற்றுக்கொண்டு வித்தி முதிர்ந்த ஏனலின்கட் *பிறையை யேற்றுக்கொண்டதொரு தாமரைமலரைப்போலும் வாண்முகத்தையும் தாழ்ந்தகுழலையும் உடையீர்! கண்டிலீரோ? வருண்டமரை போந்தனவற்றை இவ்விடத்து என்றவாறு. (க)

உ. †கள்ளி கனைநிலஞ் சோபா கிளைசெபலை
யள்ளி யளகத்தின் மேலாய்ந்து —தெள்ளி

* 'நறைபரந்த சாந்தம்' எனவும் பாடம். "இது மதியுடம்படுத்தது; இது முதற்பொருளின்றி வந்த குறிஞ்சி" எனவுரைத்து, (தொல். பொருள். அகத், ௩.) இதனை "ஊரும் பெயருங் கெடுதியும் பிறவு, நீரிற் குறிப்பி னிரம்பக் கூறித், தோழியைக் குறையுறும் பகுதியும்" (தொல், பொ, க௰, கக) என்புழிக் கெடுதிவினவியதற்கு உதாரணங்காட்டினார் நச்சினார்க்கினியர்.

† "இது களிற்றிடையுதவி கூறிற்று" எனவுரைத்து (தொல், பொ, க௰. உ௩.) இதனை எதிர்ப்பட்டதற்கு உதாரணங்காட்டி, "இதனுள் அளகத்தின் மேலாய்ந்து எனவே பூத்தந்தமை கூறினன்" என்றார் நச்சினார்க்கினியர்; (௸, ௸, பொரு, ௯.). எதிர்ப்பட்டு ஒருவன் களிறும் புலியும் நாயும் போல்வன வற்றை வென்மைக் கைக்கொண்டான் எனவும், பூத்தந்தான் தழைதந்தான் எனவும் இவ்வுறுதலிய காரணமிட்டுணர்தல் என்பீர்.

யிதணாற் கடியொடுங்கா வீர்ங்கடா யானை
யுதணாற் கடிந்தா னுளன்.

எ-து தோழி செவிலிக்கு அறத்தொடுநின்றது.

இ-ள். நறவமலரையுஞ் சுனைநீலமலரையும் அசோகமலரையும் கொய்து முடித்து நின்மகள் குழலின்மேலே ஆராய்ந்து புனைவதுஞ்செய்து பின்னொருநாட் டணிந்து பரணாற் காவலமையாத ஈர்ங்கடாயானையை மொட்டம்பாற கடிந்து காத்தும் இப்பெற்றி யுதவிசெய்தான் ஒருவனுளன்; எ-று. (உ)

௩. ‡சாந்த மெறிந்துழுத சாரற் சிறுதினைச்
சாந்த மெறிந்த விதண்மிசைச்—சாந்தங்
கமழக் கிளிகடியுங் கார்மயி லன்ன
ளிமிழக் கிளியெழா வார்த்து.

எ-து பகற்குறிக்கண் வந்த தலைமகனைக்கண்டு தோழி செறிப் பறிவுறீஇயது.

இ-ள். சந்தனங்களை வெட்டியுழுத சாரலின்கண் விதைத்த தினையின்கட் படிந்த கிளிகளைச் சந்தனங்களைக் காலாக எறிந்து செய்த பரண்மிசையிருந்து பூசிய சாந்தம் எங்கும் பரந்துகமழ உலாவிக் கடிகின்ற கார்மயிலன்னாள் தான் வாய்திறந்து ஆயோ என்றியம்புதலாற் றம்மினமென்று கிளிகள் ஆர்த்துப் போகா; எ-று.

‘சாந்தமறைத்தவிதண்’ என்று பாடமோதிச் சந்தனத் தழையான் மறைத்த இதண் என்பாருமுளர்
(௩.)

௪. §கோடாப் புகழ்மாறன் கூட லனையாளை
யாடா வடகிற் காணேன்போர் — வாடாக்
கருங்கொல்வேன் மன்னர் கலம்புக்க கொல்லோ
மருங்குல்கொம் பன்னாண் மயிர்.

எ-து தலைமகள் இற்செறிந்தகாலத்துப் புனத்தின்கண்வந்த தலைமகன் றலைமகளைக் காணாது ஆற்றாதுபெயர்கின்றான் சொல்லியது.

---

‡ ‘இறை பிறரைக் காத்தற்கு இடமெனச் செறிப்பறிவுறீஇயது’ என்றார் நச்சினார்க்கினியரும் (தொல், பொ, ௧௭, ௨௩.).

§ இதனைப் ‘பரிவுற்றுமெலியினும்’ என்பதற்குதாரணங் காட்டினு சினார்க்கினியர் (ஷை, ஷை, ஷை; ௧௨),

இ-ள். கோடாத புகழையுடைய மாறன் மதுரையனையளை அடாத பண்ணையுளுங் காண்கின்றிலேன்; போரின்கண் வாடாத கருங்கொற்றொழிலை யுடைய வேல்மன்னர் அணிகலமாகிய முடிகூடின கொல்லோ! இடையாற் கொம்பையனையாள் மயிர்கள்; எ-று.

ஆடாவடகு என்று விளையாட்டிற்கு வெளிப்படைநிலை யென்னும் அலங்காரத்தாற் பெயராயிற்று. அடா என்பதனை ஆடா என்று நீட்டியது. மன்னர் கலம் என்பது மன்னரணியும் மணிமுடியாதலான் முடியின்பெயராற் கூந்தற்குச் சேர்த்தி முடிகூடிற்றுக் கொல்லோ என்றதாகக் கொள்க. (௪)

௫. வினைவிளையச் செல்வம் விளைவதுபோ னீடாப்
*பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித்—தினைவிளைய
மையார் தடங்கண் †மயிலன்னாய் தீத்திண்டு
கையார் பிரிவித்தல் காண்.‡

எ-து தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி செறிப்பறிவுறீஇயது.

இ-ள். கெடாத பனை யென்னு மளவுபோன்ற அளவினையுடைய இன்ப விளைவினை நாமெண்ணியிருப்ப அதற்கிடையூறாக, நல்வினை விளையச் செல்வம் விளைவதுபோலப் பாத்தியின்கட் டினைவிளைதலான், மையார் தடங்கண் மயிலன்னாய்! தினைகொய்ய நாட்சொல்லி வேங்கையார் நம்மை இங்குநின்றும் பிரிவித்தலைப் பாராய்; எ-று. (௫)

௬. மானீல மாண்ட துகிலுமிழ்வ தொத்தருவி
மானீல மால்வரை நாடகேள்—§மாநீலக்
காயும்வேற் கண்ணாள் கனையிருளி னீவர
வாயுமோ மன்றநீ யாய்.

எ-து இரவுக்குறிவேண்டிய தலைமகற்குத் தோழி மறுத்துச் சொல்லியது.

இ-ள். மிக்க நீலமணிவரை மாட்சிமைப்பட்ட வெண்டுகிலையுமிழ்வது போல, அருவிகள் மயங்காநின்ற நீலமால்வரைநாடனே! கேளாய்! கரியநீல மலர்களை வெகுளாநின்ற வேல்போன்றகண்ணாள், செறிந்த இருளின்கண் நீவர, நினக்கிடையூறில்லாமை ஆராயவல்லளோ; உண்மையாகப்பாராய் எ-

---

* பனையளவு எனவும், † மடநல்லாய் எனவும் பாடம்.

‡ இஃது இவ்வொழுக்கத்தினை வேங்கை நீக்கிற்றெனத் தலைவிக்குக் கூறியது என்றார் நச்சினார்க்கினியரும். (தொல்; பொ, ௯, ௨௫).

§ 'மானீலம்' எனவும் பாடம்.

எ. கறிவளர் பூஞ்சாரற் கைந்நாகம் பார்த்து
நெறிவளர் நீள்வேங்கை கொட்கு—மறிவளர்
நன்மலை நாட விரவரின் வாழாளா
னன்மலை நாடன் மகள்.

இதுவுமது.

இ-ள். மிளகு படர்கின்ற பூஞ்சாரலின்கட் கையையுடைய நாகங்களைப் பார்த்து வழியின்கண் வளர்கின்ற பெரும்புலிகள் திரிதரும் இரவின்கண் நீ வரிற் றளிர்வளர்கின்ற நன்மலைநாட! நன்மலைநாடன்மகள் வாழாள்; எ-று. (எ)

அ. அவட்காயி னைவனங் காவலமைந்த
திவட்காயிற் செந்தினைகா ரேன—விவட்காயி
னைந்துளவா லைந்திரண் டீந்தானொ லென்னுங்கொல்
கண்ணுளவாற் காமன் கணை.

எ-து பின்னிலைமுனியாது நின்ற தலைமகன் றோழியை மதியுடம்படுத்தது.

இ-ள். அவ்விடத்து வருவேனாயின் நினக்கு ஐவனங்காவலமைந்தது; இவ்விடத்தின்கண் வருவேனாயிற் செந்தினையுஞ் செறிந்த பசுந்தினையும் காத்தலே அமைந்தது; ஆதலான் எனக்கொரு மறுமாற்றந் தருகின்றிலை; நின்றோழியாகிய இவட்காயிற் காமன் அம்பு ஐந்தென்னுளவால், அவற்றுளிரண்டம்பினைக் கண்ணாகக்கொடுத்தான்கொல்லோ! நின்றோழிக்குக் கண்கள் காமன கணை யுளவால், என்னுயிர்க்கு என்னுங்கொல்லோ? எ-று. (அ)

௯. வஞ்சமே யென்னும் வகைத்தாலோர் மாரிணைய்ந்
தஞ்சந் தமியனாய்ச் சென்றேனென்—னெஞ்சை
நலங்கொண்டார் பூங்குழலா ளன்றுயர்ந் தன்றென்
வலங்கொண்டாள் கொண்டா ளிடம்.

எ-து பாங்கற்குத் தலைமகன் றலைமகளைக் கண்டவனைக்கூறித் தன் னுற்றவமைதி சொல்லியது.

இ-ள். மாயமே யென்று சொல்லப்படுந் தன்மைத்தால்! நறுநாவிலை விறலி யா னினைவினைங்கித் தனிமே தனியேனாய்ச் சென்றேன்: சென்ற விடத்து நலங்கொண்டு நிறைந்த பூங்குழலையுடையாள் மிகவுந் தன்னுயத்தின்கண் அன்று என் வென்றியையெல்லாங் கொண்டு என்னெஞ்சத்தைத் தனக்கிட மாய்க் கொண்டாள்; எ-று. (௯)

௧0. கருவிரற் செம்முக வெண்பற்சூன் மந்தி
பருவிரலாற் பைஞ்சுனைநீர் தூஉய்ப்—பெருவரைமேற்
றேன்றேவர்க் *கொக்கு மலைநாட வாரலோ
வான்றேவர் கொட்கும் வழி.

எ-து தோழி நெறிவிலக்கியது.

இ-ள். கருவிரலினையுஞ் செம்முகத்தினையும் வெண்பல்லினையுமுடைய சூன்மந்தி தன் பெரியவிரலானே பைஞ்சுனையினீரைத்தூவிப் பெருவரையின் மேலே வைத்த தேன்பொதிகளைத் தேவர்கட்குக் கொடுக்கும் மலைநாடனே! வாராதொழிவாயாக; தேவர்கள் திரிதரும் வழியாம்; எ-று. (௧0)

௧௧. காவில் வளமலைக் கல்லருவி நாட
வரவில் வலியா யொருநீ—யிரவின்
வழிகடாஞ் சால வரவரிய வார
விழிகடா யானை யெதிர்.

இதுவுமது.

இ-ள். பழுதில்லாத வளங்களையுடைய கல்லருவிநாடனே! வலியவில்லே நினக்கு வலியாய் ஒருநீ இரவின்கண்ணுதத் துணையின்றி வழிகள் தாம் மிகவும் வரவரிய; இழியாநின்ற கடாத்தையுடைய யானைகளின்னெதிர் வாரல்; எ-று. (௧௧)

௧௨. வேலனார் போக மறிவிடுக்க வேரியும்
பாலனார்க் கீக பழியிலாள்—பாலாற்
கடும்புனலி னீந்திக் கரைவைத்தாற் கல்லா
னெடும்பணைபோ றோணோரா னின்று.

எ-து வெறிவிலக்கித் தோழி செவிலிக்கு அறத்தொடுநின்றது.

இ-ள். வெறியை விட்டு வேலனார் போக; மறியையும் விடுக்க; கள்ளையும் அக்கள்ளினை நுகர்வார்க்கீக; இப்பழியிலாதாள் ஊழ்வலியாற் கடும்புனலுட் பாய்ந்து நீந்தித் தன்னை யெடுத்துக் கரையின்கண்வைத்தாற்கல்லது நெடிய வேய்போன்ற தோளை நல்காள் இறந்துநின்று; எ-று. (௧௨)

* 'ஒண்ணிணப்பலி யொக்குவல்' என்பது திருச்சிற்றம்பலக்கோவை. (௨௩௫)

கங. ஒருவரை போலெங்கும் பல்வரையுஞ் சூழ்ந்த
வருவரை யுள்ளதாஞ் சீறூர்—வருவரையு
ளைவாய நாகம் புறமெல்லா மாயுங்காற்
கைவாய கந்சேர் காடு.

எ-து. நெறியினதருமை கூறித் தோழி இரவுக்குறிமறுத்தது.

இ-ள். ஒருமலைபோல எல்லாமலையும் தம்முள் அளவொக்க உயர்ந்து சூழ்ந்த அரிய எல்லையுள் உள்ளதாம் எங்கள் சீறூர்; நீவரும் அவ்வெல்லையுள் உள்ளகத்தின்கண் உள்ளன ஐந்துவாயையுடைய நாகங்கள்; புறத்துள்ளன ஆராயுங்காற் கையொடுசேர்ந்தவாயையுடைய யானைகள்சேர்ந்தகாடுகள்; எ-று (கங)

கச. வருக்கை வளமலையுண் மாதரும் யானு
மிருக்கை யிதன்மேலே மாகப்—பருக்கைக்
கடாஅமால் யானை கடிந்தானை யல்லாற்
றொடாஅவா லென்றோழி தோள்.

எ-து செவிலிக்குத் தோழி அறத்தொடுநின்றது.

இ-ள். வருக்கைப்பலாவினையுடைய வளமலையின்கண் மாதரும் யானும் எமக்கிருக்கையாகிய பரணைமேலேயிருந்தேமாகப் பெரிய கையினையுங் கடாத்தையும் பெருமையையும் உடைய யானையைத் தாக்கு கடிந்தானையன்றித் தீண்டாவால், என்றோழியுடைய தோள்கள்; எ-று. (கச)

கரு. வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது நீர்கொடுப்பி னல்லது—கோடா
வெழிலு முலையு மிரண்டிற்கு முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து. †

எ-து தலைமகன் சான்றோரை வரைவுவேண்டிவிடுத்தவிடத்துத் தலைமகள்தந்தைக்குந் தமையன்மார்க்கும் நற்றாய் அறத்தொடுநின்றது.

இ-ள். தளராத சான்றாண்மையையுடையார்வரவை எதிர்கொண்டிராய்க் கோடாது உடம்பட்டு நீர் கொடுப்பினன்றித் தளராத அழகும் முலையும் என்னும் இரண்டிற்கும் முந்நீராற் சூழப்பட்டவுலகும் விலையாமோ நிரம்பி; எ-று. (கரு)

† இதுவும் உசாதலாயடங்கும் என்பர் நச்சினார்க்கினியர் (தொல். பொ பொருளி. கங).

கசு. நாணாக நாறு நனைகுழலா ணல்கித்தன்
பூணாக நேர்வளவும் போகாது—பூணாக
மென்றே னிரண்டாவ துண்டோ மடன்மாமே
னின்றேன் மறுகிடையே நேர்ந்து. *

எ-து தோழி சேட்படுத்தவிடத்துத் தலைமகன் றனதாற்றாமையாற் சொல்லியது.

இ-ள். நாகநாண்மலர்நாறும் தேனல் நனையப்பட்ட குழலாள் எனக்கு நல்கித் தன்னுடைய பூண்மார்பினை நேருமளவும் என் மார்பினின்றும் அவ்வெலும்பாற் செய்த பூண்போகாதென்று நினக்குச் சொல்லினேன்; இனி யிரண்டாவது வேறொருசொல்லுண்டோ? பனைமடலாற் செய்யப்பட்ட மாவினை யூர்த்தணிந்துநின்றேன் தெருவினடுவேயுடன்பட்டு; எ-று. (கசு)

கஎ. அறிகவளை யைய விடைமடவா யாயச்
சிறிதவள்செல் லினிறுமென் றஞ்சிச்—சிறிதவ
ணல்கும்வாய் காணாது நைந்துருகி யென்னெஞ்ச
மொல்கும்வா யொல்க லுறும்.

எ-து நின்னாற் சொல்லப்பட்டவளை அறியேனாலோ என்ற தோழிக்குத் தலைமக னறியவுரைத்தது. †

இ-ள். அறியேன் யான் அவளை; தன்னுடைய மெல்லிய இடைவருந்த, மடவாய்! சிறிது மவள் நடவாளாக இறும் இறும் என்றஞ்சி அவள் எனக்குச் சிறிதும் அருளுநெறிகாணாது தளர்ந்துருகி என்னெஞ்சம் அவளொல்கி நடக்குந் தோறும் பின்சென்று தளர்தலுறும்; எ-று.

இதனுள் ஆய என்பது வருந்த என்றதாம். (கஎ)

கஅ. என்னுங்கொ லீடி ‡விளவேங்கை நாளுரைப்பப்
பொன்னும்போர் வேலவர் தாம்புரிந்து—தென்னே
மருவியா மாலை மலைநாடன் கேண்மை
யிருவியா மேன விளி §

---

* இது சாக்காடு குறித்தது எனக்கொள்வர் நச்சினார்க்கினியர் (தொல். பொ. கஎ, கக).

† நச்சினார்க்கினியரும் இதுவே கருத்தாகக்கொள்வர் (தொல். பொ. கஎ. கக).

‡ 'இளவேங்கை' எனவும் பாடம்.

§ இது தினையரிகின்றமையுஞ் சுற்றத்தார் பொருள்வேட்கையுங் கூறியது என்பர் நச்சினார்க்கினியர் (தொல். பொ. கஎ. உ).

எ-து பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி செறிப் பறிவுறீஇ வரைவுகடாயது.

இ-ள். தகுதியில்லாத இளவேங்கை நாட்சொல்ல இனிக் குரலொழிந்து இருவியாய்க்கழியும் தினையெல்லாம்; எந்தையும் என்னையன்மாருமாகிய போர் வேலவர் இவட்குப் பரிசமாக மிகவிரும்புகின்றது பொன்னும்; ஆதலாற் பயிலப் பழகிவருந்தன்மையையுடைய மலைநாடன்கேண்மை யினி யென்னாய்விளையுங் கொல்லோ! என்னே! எ-று. (கஅ)

கசு. பாலொத்த வெள்ளருவி பாய்ந்தாடிப் பல்பூப்பெய்
தாலொத்த வைவனங் காப்பாள்கண்—வேலொத்தென்
னெஞ்சம்வாய்ப் புக்கொழிவு காண்பாளே காண்கொடா
வஞ்சாயற் கேநோவல் யான்.*

எ-து பின்னின்ற தலைமகன் தோழி குறைமறுமற் றனதாற்றாமை மிகுதி சொல்லியது.

இ-ள். பால்போன்ற வெள்ளருவியைப் பாய்ந்தாடிப் பலபூக்களையும் பெய்து பரப்பினாற்போலப் பூங்கொடிகள் பரந்த ஐவனப்புனத்தைக் காப்பாள் கண்கள், வேல்போன்று எனது நெஞ்சத்தின்கண் வாவிப்புக்கு என்னுயிரை ஒழிவுகாணவேண்டியோ புறம்போகாது உள்ளே அடங்கின; இத்துணை வேண்டுமோ? அவளுடைய அழகிய மேனிக்கே நோவாநின்றேன் யான்; எ-று. (கசு)

உ0. நாள்வேங்கை பொன்விளையு நன்மலை நன்னாட
கோள்வேங்கை போற்கொடியா ரென்னையன்மார்—கோள்வேங்கை
யன்னையா னீயு மருந்தழையா மேலாமைக்
கென்னையோ நாளை யெளிது.‡

எ-து கையுறைமறை.

இ-ள். வேங்கைநாண்மலர் பொன்விளைவிக்கும் நன்மலைநாடனே! கோள்வேங்கைபோற் கொடியார் என் ஐயன்மார்; நீயுங் கோள்வேங்கையனையை யாதலான் இன்று நீயும் இங்கே நிற்கின் மிகப் போர் விளையும்; நீ கொணர்ந்த தழையை யாங்கொள்ளாமைக்கு வேறுகாரண மென்னை? நாளை நீ கொண்டு வந்தால் எளிது; எ-று. (உ0)

---

* இது பகற்குறியிரந்தது எனக்கொள்வர் நச்சினார்க்கினியர் (தொல். பொ. கஎ. ௩௩).

‡ இது கையுறைமறுத்துப் பின்வருக என்றது என்றார் நச்சினார்க்கினியரும் (தொல். பொ. கஎ. உ௩).

இ-ள். பெருமலையெங்கும் தாம் புக்காடித் தேன்வாங்கி நுகர்ந்து மனத்தின்கண் ஞுடங்கிப் பாதுகாவாது அருமலைபோன்றிருந்த யானைகளைப் பிணித்துக்கொள்வாருடைய தங்கையுடைய திருமுலைக்குத்தோற்று நாணழிந்து மிக்க அறிவு முதலாயின குணங்கள் நான்கு மழிந்து தளர்ந்துருகி வலியழிதற்கு யாமமைந்தேம்; எ-று. (உ௩.)

உ௪. நறுந்தண் டகரம் வகுளை மிவற்றை
வெறும்புதல்போல் *வேண்டாது வேண்டி—யெறிந்துழுது
செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு
நொந்தினைய வல்லளோ நோக்கு.†

எ-து தோழி துறைமறுமற் றலைமகன் றனதாற்றுமைமிதுதி சொலலியது.

இ-ள். நறுவிய குளிர்ந்த தகரம் வகுளம் என்னு மிவற்றைப் பயன் படாத வெறும்புதல்போல விரும்பாது வெட்டியுழுது, விரும்பிச் செந்தினையை வித்துவார் தங்கை பிறர்கொண்ட நோய்க்கு நொந்திரங்கவல்லளோ? ஆராய்ந்து பாராய் தோழி; எ-று. (உ௪)

உ௫. கொல்லியல் வேழங் குயவரி கோட்பிழைத்து
நல்லியற் றம்மின நாடுவபோ—னல்லிய
ஞமவேற் கண்ணு ணடுநடுப்ப வாரலோ
வேமவே லேந்தி யிரா.

எ-து தோழி தலைமகனை நெறிவிலக்கி வரைவுகடாயது.

இ-ள். கொல்லும் இயல்பினையுடைய யானைகள் புலியினாற் கொல்லப் படுதலைத் தப்பி மிக்க இயல்பினையுடைய தங்கூட்டத்தைத் தேடுவதுபோலும்; ஆதலான் மிக்கவியல்பினையுடைய அச்சத்தைச் செய்யாநின்ற வேல்போன்ற கண்ணுள் நடுநடுங்கும்வகை வாராதொழிவாயாக, அரணுகிய நின்வேலையேந்தி இரவின்கண்; எ-று. (உ௫)

உ௬. கருங்கா லினவேங்கை கான்றபூக் கன்மே
லிருங்கால் வயவேங்கை யேய்க்கு—மருங்கான்

---

* வேண்டாது எறிந்துழுது, வேண்டிவித்துவார் என்க.

† இது தலைவியைப் பேதைமையூட்டியது எனக்கொள்வர் நச்சினார்க்கினியர். (தொல், கள், உ௩).

மழைவளருஞ் சார லிரவரின் வாழா
ளிழைவளருஞ் சாய லினி.

இதுவுமது.

இ-ள். கருங்காலினையுடைய இளவேங்கை கன்மேலுகுத்த பூக்கள் பெரிய தாளினையுடைய வயப்புலியை யொக்கின்ற மருங்கான்மழைவளருஞ் சாரலானே இரவின்கண் நீ வரின் உயிர்வாழமாட்டாள், இழைவளருஞ் சாயலாள்; எ-று. (உசு)

உஎ. பனிவரைநீள் வேங்கைப் பயமலைநன் னாட
வினிவரையா யென்றெண்ணிச் சொல்வேன்—முனிவரையு
ணின்றாள் வலியாக நீவர யாய்கண்டா
ளொன்றாள்காப் பீயு முடன்று.

எ-து தோழி படைத்துமொழிகிளவியான் வரைவுகடாயது.

இ-ள். குளிர்ந்த குவடுகளையும் நீண்ட வேங்கைமரங்களையும் உடைய பய மலை நாடனே! இதற்குமுன்பு வரைந்திலையாயினும் இனி வரைந்துபுகுதாய் என்று நினக்கு ஆராய்ந்து சொல்வேன்; வெறுக்கத்தக்க மலையின்கண் நின் தாளாண்மையே வலியாக இரவின்கண் நீவர எம் அன்னை கண்டாள்; இனி எங்களோடு பகைத்து வெகுண்டு மிக்க காவலை எமக்குத் தரும்; எ-று. (உஎ)

உஅ. மேகந்தோய் சாந்தம் விசைதிமிசு காழகி
லாகந்தோய் நாக மெனவிவற்றைப்—போக
வெறிந்துழுவார் தங்கை யிருந்தடங்கண் கண்டு
மறிந்துழல்வா ரேனிம் மலை.

எ-து தலைமகன்சொன்ன குறிவழியேசென்று தலைமகளைக் கண்டு பாங்கன் சொல்லியது.

இ-ள். முகிலைத் தோயாநின்ற சந்தனமும், விசைமரமும், திமிசும், காழகிலும், துறக்கத்தைச் சென்று தோயாநின்ற நாகமரமும் என்று சொல்லப் பட்ட இவையெல்லாம் போக வெட்டிப் புனமுழுவார்தங்கையாகிய இவளுடைய இருந்தடங்கண் கண்டுவைத்தும், இங்குநின்று மீண்டு அங்குவாரவல்ல எம்பெரு மான் இத்தோற்றுகின்றமலைபோல் நிலையுடையன்; எ-று. (உஅ)

உகூ. பலாவெழுந்த பால்வருக்கைப் பாத்தி யதனோர்
நிலாவெழுந்த வார்மணி னீடிக்—சுலாவெழுந்து

கான்யாறு கால்சீத்த காந்தளம்பூந் தண்பொதும்பர்
தாஞறத் தாழ்ந்த விடம்.

எ—து பகற்குறிக்கண் இடங்காட்டியது.

இ-ள். பலாவெழுந்த மருங்கின்கண் வருக்கைப்பலாக்களாற் பாக்கப் பட்டதனடுவே நிலாவொளி மிக்க ஒழுகிய மணலுயர்ந்து வளைந்து தோன்றிக் கான்யாறுகள் இடங்களெல்லாஞ்சீத்த காந்தளம்பூந் தண்பொதும்பர்தான் விரை கமழ்ந்து தழைத்தவிடம், யாங்கள் பகலின்கண் விளையாடுமிடம்; எ-று. (உக)

௩0. திங்களுள் வில்லெழுதித் தேராது வேல்விலக்கித்
தங்களு ளாளென்னுந் தாழ்வினு—லிங்கட்
புனங்காக்க வைத்தார்போற் பூங்குழலைப் போந்தென்
மனங்காக்க வைத்தார் மருண்டு.

எ-து பாங்கற்குத் தலைமகன் கூறியது.

இ-ள். ஒரு நிறைமதியின்கண்ணே இரண்டு வில்லை எழுதிப் பிறருயிரை யுண்ணுமென்று ஆராயாது இரண்டு வேலினையழுத்தித் தங்கள் குலத்துள்ளா ளொருத்தி யென்று தாங்கள் கருதப்படுந் தாழ்வு காரணத்தால் இவ்விடத்தின் கட் டினைப்புனத்தைக் காக்கவைத்தார்போலப் பூங்கொடியை என் மனத்தைப் போந்து காக்கவைத்தார், அறிவின்றி; எ-று. (௩0)

௩க. தன்குறையி தென்னுன் றழைகொணருந் தண்சிலம்ப
னின்குறை யென்னு நினைப்பினனாய்ப்—பொன்குறையு
நாள்வேங்கை நீழலு ணண்ணு னெவன்கொலோ
கோள்வேங்கை யன்னான் குறிப்பு.

எ-து தோழி தலைமகளை மேலிதாகச்சொல்லிக் குறைநயப்பக் கூறியது.

இ-ள். தன்காரியம் இது என்று எனக்கு விளங்கச் சொல்லான், தழை யைக்கொண்டுவந்தான், தண்சிலம்பையுடையான் நின்னான்முடியுங் கருமம் இது என்னுங் கருத்தினனாய்ப் பொன்னிறந்தளரும், நாண்மலர்களையுடைய வேங்கை நிழலின்கண்ணுஞ் சிறிதுபொழுதுஞ் சார்ந்திரான், என்னைகொல்லோ! கோள் வேங்கையன்னனது கருத்து; எ-று. (௩க)

குறிஞ்சி முற்றியது.

௨. நெய்தல்.

௩௨. பானலந் தண்கழிப் பாடறிந்து தன்னைமார்
நூனல நுண்வலையா னொண்டெடுத்த—கானற்
படுபுலால் காப்பாள் படைநெடுங்கண் ணோக்கங்
கடிபொல்லா வென்னையே காப்பு.

எ-து பாங்கற்குச் சொல்லியது.

இ-ள். நெய்தற்பூக்களையுடையதண்கழியின்கண் மீன்பாட்டையறிந்து தன்னைமார் நூலாற் செய்யப்பட்ட நல்ல நுண்ணிய வலையான் முகந்தெடுத்த படுபுலாலைக் கானலின்கணிருந்து காப்பாள் படைநெடுங்கண் ணோக்கம் படு புலாலைக் காக்கமாட்டா, என்னையே காக்கும் அத்துணை; எ-று. (௧)

௩௩. பெருங்கடல் வெண்சங்கு காரணமாப் பேணா
திருங்கடன் மூழ்குவார் தங்கை—யிருங்கடலுண்
முத்தன்ன வெண்முறுவல் கண்டுருகி நைவார்க்கே
யொத்தனம் யாமே யுளம்.

இதுவுமது.

இ-ள். பெருங்கடலுள் வெண்சங்குபெறுதலை காரணமாகத் தீங்குறுதி யைப் பாதுகாவாது பெருங்கடலினுள்ளே குளிப்பார் தங்கையுடைய இருங்கடலின்முத்தன்ன வெண்முறுவல் கண்டுருகி நைவார்க்கே பொருந்தி யாம் மேவி யுளம்; எ-று. (௨)

௩௪. தாமரை தான்முகமாத் தண்ணடையீர் மாநீலங்
காமர்கண் ணாகக் கழிதுயிற்றுங்—காமருசீர்த்
தண்பரப்ப பாயிரு ணீவரிற்சூழ் கோதையாள்
கண்பரப்ப காணீர் கசிந்து.

எ-து புணர்ந்துநீங்குந் தலைமகனைக் கண்ணுற்றுநின்ற தோழி வரைவுகடாயது.

இ-ள். தாமரைமலர்கள்தாமே முகமாகக் குளிர்ந்த இலையையுடைய ஈரத்தையுடைய மாநீலமலர்கள் காதலிக்கப்படுங் கண்ணாக, அக்கண்களைக் கழிக் கட் டுயில்வியாநின்ற காமருசீர்த் தண்பரப்பையுடையானே! பெரிய இருளின் கண் நீவரிற் சூழ்ந்த கோதையையுடையாள் இரங்கி அவள் கண்கள் நீர்பரப்ப காணாய்; எ-று. (௩)

௩௫. புலாலகற்றும் பூம்புன்னைப் பொங்குநீர்ச் சேர்ப்ப
நிலாவகற்றும் வெண்மணற்றண் கானற்—சுலாவகற்றிக்
கங்குனீ வாரல் பகல்வரின்மாக் கவ்வையா
மங்குனீர் வெண்டிரையின் மாட்டு.

எ-து இரவும் பகலும் வாரலேலென்று தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

இ-ள். புலானாற்றத்தை நீக்கும் பூக்களையுடைய புன்னைப் பொங்குநீர்ச் சேர்ப்பனே! நிலாவினதொளியை வென்று நீக்கும் வெண்மணற்றண்கானலின் கட் கங்குலின்கண்ணே வருதலின் இவளாவி வருந்தலைப் பெருக்கி நீ வாராதொழிக; பகல்வருவையாயிற் பிறரால் அலர்தூற்றப்படுங் கவ்வை பெருகும், மங்குல்போன்ற நீரையும் வெண்டிரையையுமுடைய கடன்மருங்கின்; எ-று. (௫)

௩௬. முருகுவாய் முட்டாழை நீண்முகைபார்ப் பென்றே
குருகுவாய்ப் பெய்திரை கொள்ளா—துருகிமிக
வின்னா வெயில்சிற கான்மறைக்குஞ் சேர்ப்பநீ
மன்னா வரவு மற.

எ-து தோழி வரைவுகடாயது.

இ-ள். விரைவாய்த்த முட்டாழையினது நீண்முகையைக் குஞ்சு என்று கருதிக் குருகுகள் அம்முகைவாயிலே இரையைப்பெய்து தாம் அவ்விரையைக் கொள்ளா துருகி மிகவின்னாத வெயிலைத் தஞ் சிறகான் மறைக்குஞ் சேர்ப்பை யுடையானே! நீ இங்குவரும் நிலையாத வரவினை மறந்து நிலைக்கும்வரைவினைச் செய்வாயாக; எ-று. (௬)

௩௭. ஓதநீர் வேலி யுரைகடியாப் பாக்கத்தார்
காதனீர் வாராமை கண்ணோக்கி—யோதநீ
ரன்றறியு மாதலால் வாரா தலரொழிய
மன்றறியக் கொள்ளீர் வரைந்து.

இதுவுமது.

இ-ள். ஓதநீர்வேலியையுடைய பாக்கத்தார் உரையாற் கடியாது உம் மேலுள்ள காதலாற் றுன்புற்று இவள் கண்கள் நீர்வாராதவகை இவண் மாட்டு வேறுபாட்டைப் பார்த்து முன்பு நீரவட்குச் சொல்லிய வஞ்சினத்தை

ஓதநீரறியுமாதலான், இவ்வாறு வாராது அலரொழியும்வகை மன்றத்தாரறிய வரைந்துகொள்ளீர்; எ-று. (௬)

௩௮. மாக்கடல்சேர் வெண்மணற் றண்கானற் பாய்திரைசேர்
மாக்கடல்சேர் தண்பரப்பன் மார்பணங்கா—மாக்கடலே
யென்போலத் துஞ்சா யிதுசெய்தார் யாருரையா
யென்போலுந் துன்ப நினக்கு.

எ-து காமமிக்க கழிபடர்கிளவி.

இ-ள். பெருங்கடலினுனே வந்து சேர்ந்த வெண்மணற் றண்கானலின் கண் வந்து பரவாநின்ற திரைசேர்ந்த மாக்கடலைச்சேர்ந்த தண்பரப்பினையுடையான் மார்பினுன் வருத்தப்படாத பெருங்கடலே! என்னைப்போலக் கண்டுஞ்சுகின்றிலை; இக் கண்டுஞ்சாமையைச் செய்கின்ற என்போலுந் துன்பத்தை நினக்குச் செய்தார் யாவர் சொல்லாய்? எ-று. (௭)

௩௯. தந்தார்க்கே யாமாற் றடமென்றோ ளின்னநாள்
வந்தார்க்கே யாமென்பார் வாய்காண்பாம்—வந்தார்க்கே
காவா விளமணற் றண்கழிக் கானல்வாய்ப்
பூவா விளஞாழற் போது.

எ-து நோதுமலர் வரைந்துபுகுந்தபருவத்துத் தோழி சேவிலிக்கறத்தோடுநின்றது.

இ-ள். வந்து சேர்ந்தார்க்கு ஏமமாம் இளமணற் றண்கழிக் கானலிடத்து வந்து, முன்பு பூவாதேபூத்த இளஞாழற்பூவினை இவட்குத் தந்தவர்க்கேயாமால், இவள் தடமென்றோள்; இந்நாள் வதுவைவரையப் புகுந்தார்க்காமென்பாருடைய மெய்யுரையைக் காண்பாம்; எ-று. (௮)

௪௦. தன்றுணையோ டாடு மலவனையுந் தானோக்கா
வின்றுணையோ டாட லியையுமோ—வின்றுணையோ
டாடினாய் நீயாயி னங்நோய்க்கென் னொந்தென்று
போயினான் சென்றான் புரிந்து.

எ-து வலிதாகச்சோல்லிக் குறைநயப்பித்தது.

இ-ள். தன் பெடைஞெண்டொடு இன்புற்று விளையாடும் அலவனையும் என்னையும் பார்த்து, 'என்னுடைய இனியதுணையோடு இப்பெற்றிபோல ஆட எனக்குக்கூடுமோ? நின்னுடைய இன்றுணையாகிய பெடைஞெண்டுடனே

விளையாடினும் நீயாயிற் பிரிவுத்துன்பம் அறியாயாதலான், அப்பெற்றிப்பட்ட நினக்கு என்பிரிவுத்துன்பத்தைச் சொல்லி நொந்து என்னை' என்று சொல்லிப் போயினவன் பின்னைவந்து மேவித் தோன்றுகின்றிலன், என்செய்தாளோ! எ-று. (௯)

௪௧. உருகுமா றுள்ள மொருநாளு மன்றாற்
பெருகுமா னம்மலர் பேணப்—பெருகா
வொருங்குவான் மின்னோ டுருமுடைத்தாய்ப் பெய்வா
னெருங்குவான் போல நெகிழ்ந்து.

எ-து தலைமகன் சிறைப்புறத்தானாகத்தோழியாற் சொல்லெடுக்கப் பட்டுத் தலைமகள் தனதாற்றாமையாற் சொல்லியது.

இ-ள். ஒருங்கு பெருகி வலிய மின்னோடு உருமுடைத்தாகிப் பெய்ய வேண்டி நெருங்குகின்ற மழைபோலப் பெருகாநின்றது, ஏதிலார் விரும்பும்படி நம்மலரானது; ஆதலான் நம்முள்ளம் ஒருநாளுமின்றியே பலநாளும் நெகிழ்ந் துருகாநின்றது; எ-று. (௧0)

௪௨. *கவளக் களிப்பியன்மால் யானைசிற் றாளி
தவழ்த்தா னில்லா ததுபோற்—பவளக்
கடிகை யிடைமுத்தங் காண்டோறு நில்லா
தொடிகை யிடைமுத்தந் தொக்கு.

எ-து நயப்பு: கையுறையுமாம்.

இ-ள். கவளத்தையுடைய களிப்பியன்ற மால்யானை, அரிமாவின் குருளை தான் நடைகற்கும்பருவத்தும் அஞ்சி யெதிர்நில்லாததுபோல, இவளுடைய அதரமாகிய பவழத்துண்டத்தினிடையரும்பும் முறுவலாகிய முத்தங்களைக் காணுந்தோறுந் தோற்று நில்லா, இவள் கையிடைத் தொடியின்கண் அழுத்திய முத்தங்கள் திரண்டு; எ-று. (௧௧)

௪௩. கடற்கோ டிருமருப்புக் கால்பாக னாக
வடற்கோட் டியானை திரையா—வுடற்றிக்
கரைபாய்நீர் சேர்ப்ப கனையிருள் வாரல்
வரைவாய்நீ யாகவே வா.

---

* நச்சினார்க்கினியர் இதனைக் கையுறைகொண்டுவந்து கூறியதாகக் கொண்டு, இதன்கண் "நின்வாயிதழையும் எயிற்றையும் காணுந்தோறும் நில்லா, என் கையிடத்தில் இருக்கின்ற பவளக்கொடியும் முத்தும் என்க" எனவுரைப் பர் (தொல், பொ, களவு, ௧௧).

எ-து தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

இ-ள். கடலின்கட் சங்குகளே பெரிய மருப்பாகக் காற்றே பாகனாகத் திரையே அடற்கோட்டியானையாக வருத்திக் கரையைக் குத்துகின்ற நீண்ட சேர்ப்பையுடையானே! செறிந்த இருளின்கண் வாராதொழிக... எ-று. (கஉ)

சச. கடம்புலால் புன்னை கடியுந் துறைவ
படம்புலாற் புட்கடிவான் புக்க—தடம்புலாந்
தாழைமா ஞாழற் றதைந்துயர்ந்த தாழ்பொழி
லேழைமா னேக்கி யிடம்.

எ-து பகற்குறியிடங்காட்டியது.

இ-ள். மிக்க புலானாற்றத்தைப் புன்னைப்பூக்கள் நீக்குந் துறைவனே! புலாலிற்பட்ட புள்ளைக் கடியவேண்டிப் புக்க ஏழைமானேக்கி விளையாடுமிடம், பெரியபுல்லாகிய தாழையும் ஞாழலும் நெருங்கியுயர்ந்த தாழ்பொழில்; எ-று.()

சரு. தாழை தவழ்ந்துலாம் வெண்மணற் றண்கானன்
மாழை நுளையர் மடமக—ளேழை
யிணைநாடி லில்லா விருந்தடங்கண் கண்டுந்
துணைநாடி னன்றே பிலன்.

எ-து தலைமகன் சொல்லிய குறிவழியறிந்து தலைமகளைக்கண்ட பாங்கன் தலைமகனை வியந்து சொல்லியது.

இ-ள். தாழைகள் படர்ந்து பரக்கும் வெண்மணலையுடைய தண்கானலின்கண் வாழும் மாழைமையையுடைய நுளையர்மடமகளாகிய இவ்வேழையுடைய ஒப்புமை நாடி லில்லாத இருந்தடங்கண்கண்டுந் துணையை நாடிய எம்பெருமான் ஒரு குற்றமுமிலன்; எ-று. (கச)

சசு. தந்தாயல் வேண்டாவோர் நாட்கேட்டுத் தாழாது
வந்தானீ யெய்துதல் வாயாண்மற்—றெந்தாய்
மறிமகர வார்குழையாள் வாழாணீ வார
லெறிமகரங் கொட்கு மிரா.

எ-து தோழி நெறிவிலக்கி வரைவுகடாயது.

இ-ள். சிலரைக் கொணர்ந்து ஆராயல்வேண்டுவதில்லை; நல்லதொரு நாட்கேட்டு நீட்டியாதே நீ வரைதற்குவந்தால் இவளை எய்துதல் மெய்ம்மையால்: எம்மிறைவனே! எறிசுறுக்கள் சுழியெங்குஞ் சுழலு மிராவின்கண் வாரல்: வரின், மறிமகரவார்குழையாள் உயிர்வாழாள்; எ-று. (கரு)

சஎ. பண்ணாது பண்மேற்றேன் பாடுங் கழிக்கான
லெண்ணாது கண்டார்க்கே யோணங்கா—லெண்ணாது
சாவார்சான் றாண்மை சலித்திலா மற்றிவளைக்
காவார் *கயிறரீஇவிட் டார்.

எ-து பாங்கன் றலைமகனைக்கண்டு தலைமகளை வியந்துசொல்லியது.

இ-ள். யாழினைப் பண்ணாது பண்மேற்சேரத் தேன்கள்பாடுங் கழிக் கானலின்கண் ஆராயாதே வந்து கண்டார்க்கே அழகிய தெய்வங்களாம், ஆத லான், அறிவினானாராயாது இறந்துபடுவார் சான்றாண்மையின்கண் வேறுபட் டிலா மற்றிவளைக் காவாது கயிறரீஇவிட்டார்; சான்றாண்மையின் வேறு பட்டார்; எ-று. (௪௬)

சஅ. திரைமேற்போந் தெஞ்சிய தெண்கழிக் கானல்
விரைமேவும் பாக்கம் விளக்கா—கரைமேல்
விடுவாய்ப் பசப்புற விப்பிகான் முத்தம்
படிவா யிருளகற்றும் பாத்து.†

எ-து தலைமகற்கு இரவுக்குறி மறுத்தது.

இ-ள். திரைமேற்போந்து கரைமேலொழிந்த விடுவாயையும் பசும்புறத் தையுமுடைய இப்பிகான்ற முத்தம், தெண்கழிக்கானலின் விரைமேவும் பாக்கம் ஒளியுண்டாம்வகை இருள்படுமிடமெல்லாம் அவ்விருளைப் பகுத்தகற்றும்; எ-று.

சகூ. எங்கு வருதி யிருங்கழித் தண்சேர்ப்ப
பொங்கு திரையுதைப்பப் போந்தொழிந்த—சங்கு
நரன் றுயிர்த்த நித்தில நள்ளிருள்கால் சீக்கும்
வரன் றுயிர்த்த பாக்கத்து வந்து.

இதுவுமது.

இ-ள். எவ்விடத்தானே வருவாய் இருங்கழித் தண்சேர்ப்பனே! பொங்கு திரைகளானே யுதைக்கப்பட்டுப் போந்து கரையின்கட் டங்கிய சங்குகள்

---

* "வண்டலர் கோதை வாட்கண் வனமுலை வளர்த்த தாயர், கண்டயி ருண்ணுங் கூற்றங் கயிறரீஇக் காட்டியிட்டார்." என்றார் சிந்தாமணியினும் (இலக்கணை. அ௦.).

† இது பகற்குறி நேர்வான்போல் இரவுக்குறி விலக்கியது எனக்கொள்வர் நச்சினார்க்கினியரும் (தொல். களவு-உ௩.),

தெறிப் பொறையுயிர்த்த முத்தங்கள் செறிந்த இருளை இடங்களினின்றுஞ் சீயா கிற்கும்: திரைகொணர்ந்து போதவிட்டனவற்றைக் கண்டார் வியக்கின்ற பாக்கத்தின்கண்; எ-று. (கஅ)

௫0. திமில்களி ருகத் திரைபறையாப் பல்புட்
டுயில்கெடத் தோன்றும் படையாத்—துயில்போற்
குறியா வரவொழிந்து கோலநீர்ச் சேர்ப்ப
நெறியானீ கொள்வது நேர்.

எ-து தோழி வரைவுகடாயது.

இ-ள். *திமிலே களிறாகத் திரையே பறையாகத் துயில்கெடத்தோன்றும் படை புட்களாகக், கனக்கண்டாற்போலத் தேறமுடியாத கனவின்கட் டனியேவரும் வரவினை யொழிந்து, கோலநீர்ச்சேர்ப்பனே! நெறியானே வரைந்து இவளைக்கொள்வது நினக்குத்தகுதி; எ-று. (கக)

௫க. கடும்புலால் வெண்மணற் கானலுறு மீன்கட்
படும்புலால் பார்த்துப் பகர்து—மடும்பெலாஞ்
சாலிகை போல்வலை சாலப் பலவுணங்கும்
பாலிகை பூக்கும் பயின்று.

எ-து தலைமகற்குத் தோழி குறைநேர்ந்து பகற்குறியிடமறியச் சொல்லியது.

இ-ள். கடும்புலாலையுடைய வெண்மணற் றண்கழிக்கானலின்கண் இருந்து, யாங்களாங்கடுத்த மீனுகிய படுபுலாலின்கட் புட்டிரியாமற்பார்ப்பேம்: அவற்றை விற்பதுஞ்செய்வேம்; அக் கானலின்கண் அடும்பெல்லாம் பாலிகைபோலப் பூக்கும்: †சாலிகை விரிந்தாற்போல வலைகளும் உணங்கும்; எ-று. (உ0)

௫உ. திரைபாக னாகத் திமில்களி றாகக்
கரைசேர்ந்த கானல் படையா—விரையாது
வேந்து கிளர்ந்தன்ன வேலைநீர்ச் சேர்ப்பநா
ளாய்ந்து வரைத லறம்.

எ-து தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

இ-ள். திரையே பாகனாகத் திமிலே களிறாகக் கரைசேர்ந்த கானலின்கண்ணுள்ள பலபுட்களே படையாக வேந்துகிளர்ந்தன்ன வேலைநீர்ச் சேர்ப்ப

---

* திமில் - மீன்படகு.

† சாலிகை - மெய்புகுகருவி.

னே! விரையாதே நல்லநாளாராய்ந்தறிந்து வரைந் திவளைக்கோடல் நினக் கறமாவது; எ-று. (உச)

ருரு. பாறு புரவியாப் பல்களிறு நீடிமிலாத்
தேறு திரைபறையாப் புட்படையாத்—தேறுத
மன்கிளர்ந்த போலுங் கடற்சேர்ப்ப மற்றெமர்
முன்கிளர்ந் தெய்தன் முடி.

இதுவுமது.

இ-ள். பாறே குதிரையாக நீண்டதிமிலே பல களிறுகளாகத் தெளிந்த திரையே பறையாகப் புட்களே படையாகத் தேறுத வேந்துகள் படையெழுந்து கிளர்ந்தனபோலுங் கடற்சேர்ப்பனே! எமருடையமுன்னேசென்று இவளை நீயே புணர்தலை முடிப்பாயாக; எ-று. (உஉ)

ருசு. வாராய் வரினீர்க் கழிக்கான னுண்மணன்மேற்
றேரின்மா காலாழ்ந் தீமைத்தே—யோரிலோர்
கோணுடல் வேண்டா குறியறிவார்க் கூஉய்க்கொண்டோர்
நாணுடி நல்குத னன்று.

இதுவுமது.

இ-ள். வாராதொழிவாயாக: வருவையாயின் நீர்க்கழிக்கானல்தான் நுண் மணன்மேல் நின் றேர்பூண்டகுதிரை காலாழ்ந்தீமையுடைத்தாதலான்; ஒத்த குலத்தார்க்குத்தொடர்ச்சிகோடலை ஐயுற்றுராய்தல்வேண்டா: நிமித்தமறிவாரை யழைத்து நல்லதொருநாளை நாடி இவட்குநல்குதல் நன்று; எ-று. (உரு)

ருரு. கண்பரப்ப காணுய் கடும்பனி கால்வறேர்
மண்பரக்கு மாயிருண் மேற்கொண்டு—மண்பரக்கு
மாறுநீர் வேலைநீ வாரல் வரினுற்று
ளேறுநீர் வேலை யெதிர்.

இதுவுமது.

இ-ள். இவளுடைய கண்களும் மிக்கநீர்பரப்ப காணுய்: கால்வலியதேரில் மண்ணெல்லாம் பரக்கும் பெரிய இருண்மேற்கொண்டு உலகமெல்லாம் நிவந்த அலர் பரக்குமாறு, நீருண்ட வேலையுடையாய்! வாரல்: வருவையாயின் இவ ளுயிர்வாழாள், ஓதமேறுநின்ற நீர்வேலையினெதிரே: எ-று. (உசு)

டுசா. *கடற்கானற் சேர்ப்ப கழியுலாஅய் நீண்ட
வடற்கானற் புன்னை தாழ்ந் தாற்ற—மடற்கான
லன்றி லகவு மணிநெடும் பெண்ணைத்தெம்
முன்றி லிளமணன்மேன் மொய்த்து.

எ-து தலைமகற்கு இரவுக்குறிநேர்ந்த தோழி இடங்காட்டியது.

இ-ள். கடற்கானற்சேர்ப்பனே! கழிகள்சூழ்ந்து நீண்ட மீன்கொலைகளை யுடைய கானலின்கண் மிகவும் புன்னை தழைக்கப்பட்டு, பூவிதழையுடைய இக் கானலின்கண் உள்ள அன்றில்கள் அழையாநின்ற அழகிய நெடும்பெண்ணையை யுடைத்து, எம்மில்லத்தின்முன் இளமணல்களும் மொய்த்து; எ-று. (உ௫)

டுஎ. வருதிரை தானுலாம் வார்மணற் கான
லொருதிரை யோடா வளமை—யிருதிரை
முன்வீழுங் கானன் முழங்கு கடற்சேர்ப்ப
வென்வீழல் வேண்டா வினி.

எ-து தோழி வரைவுகடாயது.

இ-ள். வருதிரை தான்வந்து உலவாநின்ற ஒழுகிய மணற்கானலின்கண் ஒருதிரை வந்து பெயர்வதற்குமுன்னே இரண்டுதிரை வந்து வீழாநின்ற கான லின்கண் வந்து முழங்கு கடற்சேர்ப்பனே! என்னால் வந்து இப்புணர்ச்சியை விரும்பல்வேண்டா; இனி வரைந்துகொள்வாய்; எ-று. (உ௬)

டுஅ. மாயவனுந் தம்முனும் போலே மறிகடலுங்
கானலுஞ்சேர் வெண்மணலுங் காணுயோ—கான
லிடையெலா ஞாழலுந் தாழையு மார்ந்த
புடையெலாம் புன்னை புகன்று.

எ-து தலைமகற்குத் தோழி பகற்குறிநேர்ந்து இடங்காட்டியது.

இ-ள். மாயவனும் அவன் முன்னோனும் போல, மறிகடலும் கடற்சோலை யும் அச்சோலையைச்சேர்ந்த வெண்மணலும் பாராயோ? அக் கடற்சோலையின் நடுவெல்லாம் ஞாழலுந் தாழையுமாயிருக்கும்: நிறைந்த மருங்கெல்லாம் புன்னையா யிருக்கும்: இவற்றையும் விரும்பிப்பாராய்; எ-று. (உஎ)

டுகூ. பகல்வரிற் கவ்வை பலவாம் பரியா
திரவரி னேதமு மன்ன—புகவரிய

---

* "இரவுக்குறி யிடங்காட்டித் தோழிகூறியது" என்றார் நச்சினார்க்கினியரும் (தொல். கள. உ௩.).

தாழை துவளுந் தரங்கநீர்ச் சேர்ப்பிற்றே
யேழை நுளைய ரிடம்.

எ-து இப்பொழுது வாரலென்று வரைவுகடாயது.

இ-ள். பகல்வருவாயாயின் அலர் பலவு முளவாம்; அவ்வலர்க்கு இரங்காதே இரவுவருவையாயின் ஊறுவரும்: ஏதமும் பலவுளவாம்; உள்புகுதற்கரிய தாழையடர்ந்த திரைநீர்ச் சேர்ப்பையுடைத்து, எங்கள் ஏழைநுளையர் வாழுமிடம்; எ-று (உ௮)

௬0. திரையலறிப் போந் தெழியாத் திரியாக்
கரையலவன் காலினாற் காணாக்—கரையருகே
நெய்தன் மலர்கொய்யு நீணெடுங் கண்ணினாண்
மைய னுளையர் மகள்.

எ-து பாங்கற்குத் தலைமகன் கூறியது.

இ-ள். திரைகள் அலறிப்பெயரும்வகை தெழித்துத்திரிந்து கரையின்கண் அலவன்களைத் தன் காலினாலாராய்ந்து, கரையருகே நின்ற நெய்தன் மலர்களைக் கொய்யாநிற்கும் நீளிய நெடுங்கண்ணினாள் நுளையருடைய மையன் மகள்; எ-று. (உ௯)

௬௧. அறிகரிதி யார்க்கு மாவநீர்ச் சேர்ப்ப
நெறிதிரிவா ரின்மையா லில்லை—முறிதிரிந்த
கண்டலந்தண் டில்லை கலந்து கழிசூழ்ந்த
மிண்டலந்தண் டாழை யிணைந்து.

எ-து தலைமகற்குத் தோழி இரவுக்குறிமறுத்தது.

இ-ள். யார்க்கும் அறிதலரிது, ஓசையையுடைய நீர்ச்சேர்ப்பனே! எங்குந்திரிவாரில்லாமல் வழியில்லை: தளிர் சுருண்டிருந்த கண்டலும், அழகிய தண்டில்லைகளும், தம்முண் மிடைந்து கழியைச் சூழ்ந்த மிண்டன்மரங்களும், தாழைகளும் இடைப்பட்டு; எ-று. (௩0)

௬உ. வில்லார் விழவினும் வேலாழி சூழுலகி
னல்லார் விழவகத்து நாங்காணே—நல்லா
யவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பனைப் பாரைச்
சுவர்க்கத் துளராயிற் சூழ்.

எ-து தலைமகளை ஒருநாட் கோலஞ்செய்து அடியிற்கொண்டு முடி காறு நோக்கி 'இவட்குத் தக்கான் யாவனுவன் கொல்லோ' என்றாராய்ந்த செவிலிக்குத் தோழி அறத்தோடுநின்றது.

இ-ள். வில்லுழவர்காரணமாகத் தொடங்கிய விழவகத்தும் நல்லாராகிய வனிதையர்காரணமாகத் தொடங்கிய விழவகத்தும் எல்லா மார்தருந் திரள்வ ராதலால், நாங்கள் அங்குக் கண்டறியேம், எமக்கு ஒருதவி பண்டொருநாட் செய்த சேர்ப்பனேடொப்பாரை ; மற்றவனே இவட்குத்தக்கான் : 'அவனைப் போலும் ஆடவர் சுவர்க்கத்துளராயின் ஆராய்வாய் ; எ-று.

உவர்க்கம் என்பது கடற்கரை. வேலாழி என்பது கடல். (௩௧)

நெய்தன் முற்றியது.

௩-பாலை.

௩௩. எரிநிறநீள் பிண்டி யிணரின மெல்லாம்
வரிநிற நீள்வண்டர் பாடப்—புரிநிறநீள்
பொன்னணிந்த கோங்கம் புணர்முலையாய் பூங்தொடித்தோ
ளென்னணிந்த வீடில் பசப்பு.

எ-து தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறீஇயது.

இ-ள். எரிநிறத்தையுடைய அசோகின் பூங்கொத்தினமெல்லாம் : வரி நிறத்தையுடைய வண்டுகள் இளியென்னும் பண்ணைப்பாட விரும்பப்படுகின்ற நீண்ட மிக்க பொன்போன்ற மலர்களையணிந்தன, கொங்கமெல்லாம். ஆதலாற் பொருந்திய முலையினையுடையாய்! நின்னுடைய பூந்தொடித்தோள்கள் யாதின் பொருட்டு அணிந்தன? தமக்குத் தகுதியில்லாத பசப்பினை; எ-று.

௩௪. பேணு யிதன்றிறத் தென்றாலும் பேணாதே
நாணுய நல்வளையாய் நாணின்மை—காணா
யெரிசிதறி விட்டன்ன வீர்முருக் கிடில்
பொரிசிதறி விட்டன்ன புன்கு.

இதுவுமது.

இ-ள். 'நீ யுறுகின்ற துன்பத்தைப் பாதுகாவாய்' என்று யான் சொன் னாலும்? பாதுகாவாதே நாணத்தகும் ஆற்றாமைசெய்த நல்வளையாய் !' நீயு முன்பு நாணின்மைசெய்தாயென்பதனை இனி யறிந்துகொள்ளாய் ; எரியைச்

சிதறிவிட்டாற்போலவிருந்த, ஈர்முருக்குக்கள் : கனமில்லாத பொரி சிதறி விட்டாற்போலப் பூத்தன, புன்குகள் : ஆதலான் அவர் சொல்லிய பருவம் இது காண்; எ-று. (உ)

சுரு. தான்றாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
வீன்றாய்நீ பாவை யிருங்குரவே—யீன்றாண்
மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டா யீதென்று வந்து.

எ-து சுரத்திடைச் சென்ற செவிலித்தாய் குரவோடு புலம்பியது.

இ-ள். கோங்கந் தான் தாயாகத் தாழ்ந்து முலைகொடுத்துவளர்ப்ப நீ பாவையினையீன்ற இத்துணையேயாதலான், இருங்குரவே! யானீன்றாள் நினக்குச் சொல்லிய சொல்லை யெனக்குச் சொல்லாயாயினும் முள்ளெயிற்றாள்போயின வழியையாயினும் சொல்லிக்காட்டாய் வந்து இது என்று; எ-று. (சு)

சுசு. வல்வருங் காணாய் வயங்கி முருக்கெல்லாஞ்
செல்வர் சிறார்க்குப்பொற் கொல்லர்போ—னல்ல
பவளக் கொழுந்தின்மேற் பொற்றாலி பாஅய்த்
திகழக்கான் றிட்டன தேர்ந்து.

எ-து தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

இ-ள். நங்காதலர் விரைந்துவருவர் : விளங்கி முருக்குக்களெல்லாம், செல்வமுடையார்புதல்வர்க்குப் பொற்கொல்லர் ஐம்படைத்தாலிசெய்தாற் போல, மிக்க பவளக்கொழுந்தின் அடியிலே பொற்றாலியைப் பதித்துவைத்தாற்போல் விளங்கக் கான்றன : ஆதலாற் றேர்ந்துபாராய்; எ-று. (எ)

சுஎ. வெறுக்கைக்குச் சென்றார் விளங்கிழாய் தோன்றார்
பொறுக்கவென் றாற்பொறுக்க லாமோ—வொறுப்பபோற்
பொன்னு ளுறுபவளம் போன்ற புணர்முருக்க
மென்னு ளுறுநோய் பெரிது.

எ-து பருவங்கண்டு ஆற்றளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். மிக்க பொருட்பொருட்டுச் சென்றார், விளங்கிழையாய்! வந்து தோன்றுகின்றிலர்; இப்பருவத்தின்கண் நீ யென்னை ஆற்று என்றால் எனக்கு ஆற்றலாமோ? என்னை ஒறுப்பனபோலப் பொன்னின் உள்ளுறவைத்த பவளம் போன்ற, பொருந்திய முருக்கம்பூக்கள்; ஆதலால் என்னுள்ளத்துற்ற நோய் பெரிது; எ-று. (அ)

௬௮. சென்றக்காற் செல்லும்வா யென்னோ விருஞ்சுரத்து
நின்றக்கா னீடி யொளிவிடா—நின்ற
விழைக்கமர்ந்த வேயே ரிளமுலையா ணீடில்
குழைக்கமர்ந்த நோக்கின் குறிப்பு.

எ-து பொருள்வயிற்பிரிந்த நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

இ-ள். பொருளின்பொருட்டு நா மிவளைநீக்கிப்போயக்காற் போம்வகை யெங்ஙனேயோ? நெஞ்சே! மன்னிய அணிகட்குத் தக்க அழகையுடைய இளமுலையாளுடைய ஒப்பில்லாத குழைக்கமர்ந்த நோக்கின் குறிப்புக்கள் நம்முன்னே வந்து நீடியொளிவிட்டு இருஞ்சுரத்திடையே தோன்றிநின்றக்கால்; எ-று. ()

௬௯. அந்த நெடிய வழற்கதிரோன் செம்பாக
மந்தமறைந் தானிவ் வணியிழையோ—டொத்த
தகையினு லெஞ்சீறூர்த் தங்கினிரா னாளை
வகையினிராய்ச் சேறல் வனப்பு.

எ-து இடைச்சுரத்துக் கண்டார் செலவு விலக்கியது.

இ-ள். வழிசெலும் நெடிய: அத்தமலையின்கண்ணே அழற்கதிரோனுஞ் செம்பாகம் மறைந்தான்: இவ்வணியிழையோடு நீரும் எம்மோடொத்த தகையினால் எஞ்சீறூரிலே இன்று தங்கினீராய் நாளை எங்களி னீங்கிப்போதல் அழகு; எ-று. (எ)

௭0. நின்னோக்கங் கொண்டமான் றண்குரவ நீழல்காண்
பொன்னோக்கங் கொண்டபூங் கோங்கங்காண்—பொன்னோக்கங்
கொண்ட சுணங்கணி மென்முலைக் கொம்பன்னாய்
வண்ட லயர்மணன்மேல் வந்து.

எ-து புணர்ந்துடன்போய தலைமகன் தலைமகளை ஆற்றுவித்துக் கொண்டுபோவான் சொல்லியது.

இ-ள். நின்னுடையநோக்கின் றன்மையைக்கொண்ட மான்களைப்பாராய்; குளிர்ந்த குரவநீழலைப் பாராய்; பொன்னினது காட்சியைக்கொண்ட பூங் கோங்குகளைப் பாராய்: பொன்னினதுகாட்சியைக்கொண்ட சுணங்கணிந்த மென்முலையையுடைய கொம்பன்னாய்! மணன்மேல்வந்து விளையாட்டைவிரும்பாய்; எ-று. (அ)

எக. அஞ்சுடர்நீள் வாண்முகத் தாயிழையு மாறிலா
வெஞ்சுடர்நீள் வேலானும் போதரக்கண் — டஞ்சி
யொருசுடரு மின்றி *யுலகுபா ழாக
விருசுடரும் போந்தனவென் றார்.†

எ-து சுரத்திடைச்சென்ற செவிலித்தாய் தலைமகனையுந் தலைமகளையும் கண்டார் சொல்லிய வார்த்தையைத் தாங்கள் கேட்டார்க்குச்சொல்லி யாற்றுவித்தது.

இ-ள். அழகிய மதிபோன்ற நீண்ட ஒளியையுடைய முகத் தாயிழையும் எதிரில்லாத வெஞ்சுடர்நீள்வேலானும் இச்சுரத்தின்கண்ணேபோதரக் கண்டு அஞ்சி 'இருசுடரும் ஒருசுடருமின்றியே உதயம் பாழாம்வகை இரு சுடரும் அச்சுரத்தே போந்தன' என்று கண்டார் சிலர் சொன்னார்; எ-று. (கூ)

எஉ. முகந்தா மரைமுறுவ லாம்பல்கண் ணீல
மிகந்தார் விரல்காந்த ளென்றென் — றுகந்தியைந்த
மாழைமா வண்டிற்கா நீழல் வருந்ாதே
யேழைதான் செல்லு மினிது.

எ-து சுரத்திடைச்சென்ற செவிலியைத் தலைமகளைக்கண்டார் சொல்லி ஆற்றுவித்தது.

இ-ள். இவள்முகம் தாமரைமலர், இவள் முறுவலையுடையவாய் ஆம்பல் மலர், இவள்கண் நீலமலர், ஒன்றையொன்றெவ்வாது கடந்தார்ந்த விரல்கள் காந்தளரும்பு என்று கருதிக் காதலித்துப் பொருந்திய மாழைமா வண்டிற்குத் தக்க நீழலிலே வருத்தமின்றி நின்னுடைய ஏழை செல்லாநின்றாள் இனிதாக; எ-று. (சுo)

எங. செவ்வாய்க் கரியகட் சீறுற் கேளாதுங்
கவ்வையாற் காணாது மாற்றாது — மவ்வாயர்
தார்த்தத்தை வாய்மொழியுந் தண்கயத்து நீலமு
மோர்த்தொழிந்தா ளென்பேதை யூர்ந்து.

---

* 'யிலகு' எனவும் பிரதிபேதம்.

† இஃது இடைச்சுரத்துக் கண்டோர்கூறிய வார்த்தையைக் கேட்டோராகச் சிலர் கூறியது' என்றார் நச்சினார்க்கினியரும் (தொல். அகத். சுo).

எ-து முன்னொருநாள் உடன்போக்கு வலித்துத் தலைமகனையுந் தலைமகளையும் உடன்படுவித்துப் பின்னை அறத்தொடுநிலை மாட்சிமைப்பட்டமையால் தலைமகளைக் கண்டு தோழி உடன்போக்கு அழுங்குவித்தது.

இ-ள். செவ்வாயின்கட் டார்த்தத்தைவாய்மொழியைக் கேளாதுங் கரிய கண்ணின்கட் டண்கயத்து நீலங்களின் றன்மைகளைக் காணாதும் அவ்வாயம் ஆற்றுதொழிவதனை யோர்த்துப் பின் புடன்போக்கை யொழிந்தாள் எல்பேதை அலர்காரணத்தான் முன் புடன்போக்கை மேற்கொண்டு; எ-று. (௧௧)

௭௪. புன்புறவே சேவலோ டேல் பொருளன்று
லன்புற வேயுடையா ராயினும்—வன்புற்
றதுகா ணகன்ற வழிநோக்கிப் பொன்போர்த்
திதுகாணென் வண்ண மினி.

எ-து காமம் மிக்க கழிபடர்கிளவி; நிலத்தாற்பாலை; ஒழுக்கத்தான் மருதல்.

இ-ள். புல்லியநிறத்தையுடைய பேடைப்புறவே! நின்சேவலோடேல் நினக்குக்காரியமன்றால்; எங்காதலர் எமக் கன்புமிகவுடையாராயினும் அவர் மனநெகிழாது வலியானதன்மையைப் பாராய்; அவர் தேரோடும்வந்து நீங்கிய வழிச்சுவடு நோக்கிப் பொன்னிறம் போர்க்கவந்த வண்ணமிதனைப் பாராய், இப்பொழுது; எ-று. (௧௨)

௭௫. எரிந்து சுடுமிரவி யீடில் கதிரான்
விரிந்து விடுகூந்தல் வெஃகாப்—புரிந்து
விடுகயிற்றின் மாசுணம் வீயுநீ ளத்த
மடுதிறலான் பின்சென்ற வாறு.

எ-து மகட்போக்கிய தாய் சொல்லியது.

இ-ள். அழன்று சுடாநின்ற பகலோனது ஒப்பில்லாக் கதிரோன் மாசுணங்கள் முறுக்கிவிட்ட கயிறுபோலப் புரண்டழியும் அத்தம், விரிந்துவிட்ட கூந்தலையுடையாள் அடுதிறலான்பின் விரும்பிச்சென்ற வழி; எ-று. (௧௩)

௭௬. நெஞ்ச நினைப்பினு நெற்பொரியு நீளத்த
மஞ்ச லெனவாற்றி னஞ்சிற்று—லஞ்சிப்
புடைநெடுங் காதுறப் போழ்ந்தகன்று நீண்ட
படைநெடுங்கண் கொண்ட பனி.

எ-து பொருள்வலித்த நெஞ்சிற்குச் சொல்லித் தலைமகன் செலவழுங்கியது.

இ-ள். என்னெஞ்சமே! இவளை ஆற்றுவிக்குஞ் சிலசொற்களைச் சொல்ல நினைக்கின்றாயாயின் இவளேதான் நெற்பொரியும் நீளத்தத்தைச்சொல்ல நினைப்பதற்குமுன்னே பிரிவினையஞ்சிற்றால்; புடைநெடுங்காதுறப் போழ்ந்தனன்று நீண்ட படைநெடுங்கண்களும் பிரிவினையஞ்சிப் பனிகொண்டன: ஆதலான், நமக் கிவளைப் பிரியமுடியாது; எ-று. (௧௪)

௭௭. வந்தாற்றான் செல்லாமோ வாரிடையாய் வார்கதிரால்
வெந்தாற்போற் றோன்றுநீள் வேயத்தம்—தந்தார்
தகரக் குழல்புரளத் *தாழ்துகில்கை யேந்தி
மகரக் குழைமறித்த நோக்கு.†

எ-து வினைமுற்றிய தலைமகன் தலைமகளை நினைந்தவிடத்துத் தலைமகள் வடிவு தன்முன்னின்றாற்போல வந்துதோன்ற அவ்வடிவை நோக்கிச் சொல்லி ஆற்றுவிக்கின்றது.

இ-ள். கொண்டணிந்து நிறையப்பட்ட தகரத்தையுடைய குழல்கள் அசையத் தாழ்ந்த துகிலைக் கையானே ஏந்தி மகரக்குழை மறித்த நோக்குடனே நீ வந்தால் யாம் போகோமோ? அரிய இடையினையுடையாய்! நீயிரங்கவேண்டா; எ-று. (௧௫)

௭௮. ஒருகை யிருமருப்பின் மும்மதமால் யானை
பருகுநீர் பைஞ்சுனையிற் காணா—தருகல்
வழிவிலங்கி வீழும் வரையத்தஞ் சென்றா
ரழிவில ராக வவர்.

எ-து ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

இ-ள். ஒருகையினையும் இருகோட்டினையும் மூன்றுமதத்தினையும் உடைய மால்யானைகள் பருகுநீரைப் பைஞ்சுனையின்கட் காணாவாய் மருங்கே வழிவிலங்கித் தளர்ந்துவீழும் வரைகளையுடைய அத்தத்தைச் சென்ற அவர் அவ்வழி இடையூறின்றி அழிவிலராக; எ-று. (௧௬)

---

* 'தாழ்கலையை' எனவும் பிரதிபேதம்.

† இஃது உருவுவெளிப்பாடு. நின்னொடுபோதுவேனென்று அவளை ஆற்றுவித்தது. திணை பாலையிற்பாலையென்றார்: நச்சினார்க்கினியர் (தொல். அகத். ௫௦).

ல

எசூ. சென்றார் வருதல் செறிதொடி செய்த்தன்றா
னின்றார்சொற் றேறுதாய் நீடின்றி—வென்று
செடுத்த கொடியி னிலங்கருவி தோன்றும்
கடுத்த மலைநாடு காண்.

எ-து பருவங்காட்டித் தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

இ-ள். நம்மைப் பிரிந்துபோயினார் வருதல் செறிதொடி! செய்த்தன்றால், நின்மாட்டுநின்றொழுகுகின்றாருடைய சொற்களைத் தெரியாதாய் போரின்கண் வென்றெடுத்த கொடிகள்போலத் தெளிந்திலங்கருவி தோன்றுகின்றது மிக்க மலைநாடாதலால் நீடின்றி யின்றே யிரவின்கட் காண்பாயாக; எ-று. (கஎ)

அ0. உருவவேற் கண்ணா யொருகாற்றேர்ச் செல்வன்
வெருவிவீந் துக்கநீ ளத்தம்—வருவர்
சிறந்த பொருடருவான் சேட்சென்றா ரின்றே
யிறந்துகண் ணாடு மிடம்.

இதுவுமது.

இ-ள். அஞ்சத்தக்க வேல்போன்ற கண்களையுடையாய்! ஒருகாலை யுடைய தேர்ச்செல்வனார் பிறர் கண்டார் வெருவும்வகை வீந்தவிந்த கானந் தானை முயற்சியாற் சிறந்த பொருடருவான்வேண்டிச் சென்றவர் இன்றே வருவர்; மிக்குக் கண் இடமாடாநின்றது; எ-று. (கஅ)

அக. கொன்றாய் குருந்தே கொடிமுல்லாய் வாடினீர்!
நின்றே னறிந்தே னெடுங்கண்ணாள்—சென்றாளுக்
கென்னுரைத்தீர்க்கென் னுரைத்தாட்கென்னுரைத்தீர்க்கென் னுரைத்தாண்
மின்னிரைத்த பூண்மிளிர விட்டு.

எ-து தலைமகள் இற்செறிப்புக் கண்டபின்னை அவள் நீங்கிய புனங்கண்டு ஆற்றாளாய் மீள்கின்ற தலைமகன் சொல்லியது. சுரத்திடைச்சென்ற செவிலித்தாய் சொல்லியதூஉமாம்.

இ-ள். கொன்றாய் குருந்தே கொடிமுல்லாய் நீர் வாடுகின்றீர்: இதற்குக் காரணம் யானறிந்தேன்: நெடுங்கண்ணா ளிங்குநின்று போகின்றாட்கு நீரென்னுரைத்தீர்? நமக்கு அவ ளென்னுரைத்தாள்? அவட்கு நீர் பின்னை என்னுரைத்தீர்? அவள் உமக்குப் பின்னை என்னுரைத்தாள்? மின்னிரைத்த பூண் விட்டுமிளிராநின்று; எ-று. (கசு)

அஉ. ஆண்கட னாற்றை யாயுங்கா லாடவர்க்குப்
பூண்கடனாப் போற்றிப் புரிந்தமையாற் — பூண்கடனாச்
செய்பொருட்குச் செல்வாராற் சின்மொழி நீசிறிது
நைபொருட்கட் செல்லாமை நன்று.

எ-து தலைமகனது செலவுக்குறிப்பறிந்து ஆற்றாளாய தலைமகளைத் தோழி உலகினதியற்கை கூறி ஆற்ற துடன்படுத்துவித்தது.

இ-ள். ஆள்வினைக்கடனாகிய நெறியை ஆராயுங்கால், ஆடவர்க்குப்பூணுங் கடனாகப் பாதுகாத்து நல்லார் சொல்லி மேவினமையாற் றமக்கு அவ்வாள்வினை பூணுங்கடனாகத் தேடும்பொருட்குச் செல்வர் நங்காதலர்: ஆதலாற் சின் மொழியையுடையாய்! நீ யதற்கு மனனழியுந் திறத்தின்கட் செல்லாமை நன்று; எ-று. (உ0)

அங. செல்பவோ சிந்தனையு மாகாதா னெஞ்செரியும்
வெல்பவோ சென்றார் வினைமுடிய — நல்லா
பிதடி கரையுங்கன் மாபோலத் தோன்றிச்
சிதடி கரையுந் திரிந்து.

எ-து தலைமகன்செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

இ-ள். இப்பெற்றித்தாகிய சுரத்தின்கட் செல்வாருளரோ? நினைத்தலு மாகாதால்; நினைத்த நெஞ்சம் எரியும்: மாறிச் சுரத்தின்கட் சென்றார் சுரத்தை வெல்லவல்லரோ? தாமெடுத்துக்கொண்டவினை முடியும்படி ; நல்லாய்! காட் டெருமைப்போத்துக்களைப் பிரிந்த பெண்ணெருமைகள் கதறுநிற்கும்: அங்குப் பலவாய்க்கிடந்த கற்களும் மா பறந்தாற்போலத்தோன்றும் : சின்வீடுகளும் திரிந்து கதறுநிற்கும் ஆதலான்; எ-று. (உக)

அச. கள்ளியங் காட்ட கடமா விரிந்தோடத்
தள்ளியுஞ் செல்பவோ தம்முடையார் — கொள்ளும்
பொருளில ராயினும் பொங்கெனப்போந் தெய்யு
மருளின் மறவ ரதர்.

இதுவுமது.

இ-ள். கள்ளியங்காட்டின்கட் கடமாக்கள் இரிந்தோடும்வகை மறந்துஞ் செல்வரோ தம்மறிவையுடையார்: வழிபோம் வம்பலராற் கொள்ளும் பொரு ளிலராயினும் கதுமெனப் போந்தெய்கின்ற அருளில்லாத மறவர் வாழும் வழியை; எ-று. (உஉ)

௮௫. பொருள்பொரு ளென்றார்சொற் பொன்போலப் போற்றி
யருள்பொரு ளாகாமை யாக—வருளான்
வளமை கொணரும் வகையினன் மற்றோ
ரிளமை கொணர விசை.

எ-து தலைமகனைத் தோழி செலவழுங்குவித்தது.

இ-ள். பொருள் பொருளாவதென்று சொன்னார் சொல்லைப் பொன்போல விரும்பித்தெளிதலான், அருளுடைமை பொருளாகாமை ஆவதாயினும் ஆக; பொருளைக்கொணரும்வகை நமைபோல நின்னருளினாலே வேறோரிளமை கொணர்தற்கு எமக்குடன்படுவாயாக; எ-று. (௨௩)

௮௬. ஒல்வா ருளரே லுரையா யொளியாது
செல்வாரென் றாய்நீ சிறந்தாயே—செல்லா
தசைந்தொழிந்த யானை பசியாலாட் பார்த்து
மிசைந்தொழியு மத்தம் விரைந்து.

எ-து தலைமகள் தோழிக்குச் செலவுடன்படாது சொல்லியது.

இ-ள். ஆற்றுவாருளராயின் அவர்பிரிவின் அவர்கட்குரையாய் தவிராதே நங்காதலர் செல்வாரென்றாய் ஆதலால் நீ யெனக்கு மெய்யாகச் சிறந்தாயே யன்றோ; போகமாட்டாதே வருந்தி யிறந்துவீழ்ந்த யானைகளை அங்குள்ள வர்கள் தம்பசியானே எங்கும்பார்த்துத் தின்றுபோம் அத்தத்தினை விரைந்து; எ-று. (௨௪)

௮௭. ஒன்றானு நாமொழிய லாமோ செலவுதான்
பின்றாது பேணும் புகழான்பின்—பின்றா
வெலற்கரிதாம் வில்வலான் வேல்விடலை பாங்காச்
செலற்கரிதாச் சேய சுரம்.

எ-து புணர்ந்துடன்போக்கு நயப்பித்த தோழிக்குத் தலைமகள் உடன்பட்டுச் சொல்லியது.

இ-ள். பிறழாத வெலற்கரிதாகிய வில்லினை வல்லனாகிய வேல்விடலை தான் துணையாகச் சுரத்தைச் செலற்கரிதாக யாதானுஞ் சொல்லலாமோ? அப் பேணும் புகழான்பின் சேறல் ஒழுக்கத்திற் பிறழாதுகாண்; எ-று. (௨௫)

௮௮. அல்லாத வென்னையுந் தீமற் றைபன்மார்
பொல்லாத தென்பது நீபொருந்தா—யெல்லார்க்கும்
வல்லி யொழியின் வகைமைநீள் வாட்கண்ணாய்
புல்லி யொழிவான் புலந்து.

எ-து புணர்ந்துடன்போவா ளுரைப்பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். எம்பெருமானோடு பொருந்தி இங்குநின்றும் ஒழிந்து போதற்கு முன்பு வேறுபட்டு மற்றதன்கண் அல்லாத வென்னை நீ யிங்கேயிருந்து நம் ஐயன்மார் பொல்லாததென்றுகொள்ளும் மனத்தின்கண்ணுள்ள கோளினையுந் திருத்தி நீபொருந்தாய் எல்லார்க்குந் தத்தமனத்தின்கணுள்ள வேறுபாடொழியு மாயின் வல்லிபோன்றிரு வாட்கண்ணாய்; எ-று.

அல்லதூஉம், உடன்போகின்ற என்னைப் புல்லிக்கொண்டொழிவான் வேண்டி மனத்தின்கட் புலந்து நீந்துதற்கு வல்லையாயொழியின் வகைகளமையை யுடைய நீண்ட வாட்கண்ணாய்! ஆண்மையல்லாத வுரைகளை என்னைநீக்கி நம்மையன்மார் பொல்லாத தென்னுங் கருத்தினையும் நீக்கி எல்லார்க்கும் பொருந்துவாயாக; என்றுமாம். (உகூ)

ருஎ. நன்னிநீர் சென்மி னமரவ ராபவே
வெண்ணிய வெண்ண மெளிதரோ—வெண்ணிய
வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாத்
தண்சுட ரன்னாளைத் தான்.*

எ-து சுரத்திடைச் சென்ற செவிலிக்குத் தலைமகனையுந் தலைமகளையுங் கண்டமை எதிர்ப்பட்டார் சொல்லி ஆற்றுவித்தது.

இ-ள். பொருந்தி நீர் சென்மின்: அவரும் நமக்குச்சுற்றத்தாராயின் நீர் அவரைச் சென்றெய்தவேண்டுமென்று எண்ணிய எண்ணம் எளிது: நீர் கருதிய வெய்ய பகலோனன்னானை யான்கண்டேன், கண்டாளாம் தண்மதியனையாளை யிவள்தான்; எ-று. (உஎ)

ருo. வேறாக நின்னை வினவுவேன் றெய்வத்தாற்
கூறாயோ கூறுங் குணத்தினாய்—வேறாக

* "மீண்டார் எனவுவந் தேன்கண்டு நும்மையிம் மேதகவே, பூண்டா ரிருவர்முன் போயின ரேபுலி யூரெனைநின், றாண்டா னருவரை யாளியன் னானைக்கண் டேனயலே, தூண்டா விளக்கனை யாயென்னை யோவன்னை சொல்லியதே" என்னுந் திருச்சிற்றம்பலக்கோவையினையும் (உசச) ஈண்டைக்கு நோக்கிக் கொள்க.

வென்மனைக் கேறக் கொணருமோ வெல்வளையைத்
தன்மனைக்கே யுய்க்குமோ தான்.*

இ-து † 'தன்னு மவனும்' என்பதனுள் 'நன்மை தீமை' என்பதனால் நற்றாய் படிமத்தானை வினாயது.

இ-ள். நிமித்தஞ்சொல்வார்பலருள்ளும் நின்னை வேறாகக்கொண்டு வினவாநின்றேன்: உன்னுடைய தெய்வத்தன்மையுடைய கழங்கைப் பார்த்துக் கூறாய்; உலகத்தார் கூறும் நற்குணத்தினையுடையனாய் எல்வளையை உடன்கொண்டுபோனவன் என்மனைக்கே மணஞ்செய்வதாகக் கொண்டுவருமோ? அஃதன்றி யாம்வேறாகத் தன்மனைக்கே மணஞ்செய்யக் கொண்டுபோமோ தான்; எ-று. (௨௮)

௩௧. கள்ளிசார் காரோமை நாரில்பூ நீண்முருங்கை
நள்ளியவேய் வாழ்பவர் நண்ணுபவோ—புள்ளிப்
பருந்து கழுகொடு வம்பலர்ப் பார்த்தாண்
டிருந்துறங்கி வீயு மிடம்.

இ-து தலைமகற் செலவுடன்படாததலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். புள்ளிப் பருந்துகள் கழுகுடனே வழிபோவாரைப்பார்த்து அங்கிருந்துறங்கப்பட்டுக் கள்ளியுஞ் சாருங் காரோமையும் நாரில்பூநீண்முருங்கையும் வேயும் பொருந்தியமர்ந்து வீயுமிடத்தை உயிர்வாழ்பவர் நண்ணுவரோ; எ-று. (௨௧)

௩௨. செல்பவோ தம்மடைந்தார் சீரழியச் ‡சிஃகுவன்றிக்
கொல்பபோற் கூப்பிடும் வெங்கதிரோன்—மல்கிப்
பொடிவெந்து பொங்கிமேல் வான்சுடுங் கீழா
லடிவெந்து கண்சுடு மாறு.

---

* 'அருஞ்சுர மிறந்த' என்னும் அகப்பாட்டினுள்ளும் 'ஆருவ தறியுமோ தவாய் வேலை, கூறுக மாதோ நின்கழங்கின் றிட்ப, மாறாது வருபனி கலுழுங் கங்குலி, லாடுதுவருமென் கண்ணினிது படீஇய, வெம்மனை முந்துறத் தருமோ, தன்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே' என வருதல் காண்க.

† "தன்னு மவனு மவளுஞ் சுட்டி, மன்னு நிமித்த மொழிப்பொருள் தெய்வ, நன்மை தீமை யச்சஞ் சார்தலென், றன்ன பிறவு மவற்றொடு தொகைஇ" என்பது தொல்காப்பியம். (அகத். ௩௧)

‡ 'சிற்றுவன்றி' எனவும் பிரதிபேதம்.

இதுவுமது.

இ-ள். தம்மையடைந்தார் சீர்மையழிய நல்லார் செல்வரோ? சின்வீடுகள் நெருங்கிக் கடியவோசையாற் பிறரைக் கொல்வனபோலக் கூப்பிடாநிற்கும் வெய்ய வெயிலோன் மிக்குப் பொடிகள் வெந்து பொங்கி மேலே வீசும் பிணைச் சுடாநிற்கும், கீழின்கண் வழிபோவார் அடி வேவ அவர் கண்களைச் சுடாநிற்கும் இப்பெற்றிப் பட்ட அவ்வழியினை; எ-று. (௯௦)

பாலை முற்றியது.

௪-முல்லை.

---

௯௩. கருங்கடன் மாந்திய வெண்டலைக் கொண்மூ
விருங்கடன்மா கொன்றான்வேன் மின்னிப்—*பெருங்கட
றன்போன் முழங்கித் தளவங் குருந்தணைய
வென்கொல்பா ளுற்றம் வகை.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குரைத்தது.

இ-ள். கருங்கடலைப் பருகிய வெண்டலைமுகில்கள் இருங்கடலின்கண்ணே புக்கு மாவினைக்கொன்ற முருகன்வேல்போல மின்னிப் பெருங்கடலைப்போல முழங்குதலால் முல்லைக்கொடிகளெல்லாம் குருந்தமரத்தின் மேற்சென்றணையக்கண்டு யான் ஆற்றுந்திறம் என்னைகொல்லோ? எ-று. (௯)

௯௪. பகல்பருகிப் பல்கதிர் ஞாயிறுகல் சேர
விகல்கருதித் திங்க ளிருளைப்—பகல்வர
வெண்ணிலாக் காலு மருண்மாலை வேய்த்தோளா
யுண்ணிலா தென்னுவி யூர்ந்து.

இதுவுமது.

இ-ள். பகற்பொழுதைப் பருகிப் பல்கதிர்ஞாயிறு மலையின்கட்சேரத் திங்களானது இருளைப் பகையென்றுகருதிப் பகலின்றன்மைவர வெண்ணிலாவையுகாநின்ற மருண்மாலையின்கண், வேய்த்தோளாய்! என்னிடத்து நிலைநின்றதில்லை, என்னுயிர் சென்று: எ-று. (௨)

---

* 'பொருங்கடல்' பிரதிபேதம்.

௩௫. மேனோக்கி வெங்கதிரோன் மாந்தியநீர் கீழ்நோக்கிக்
கானொக்கங் கொண்டழகாக் காண்முடைவாய்—மானோக்கி
போதாரி வண்டெலா நெட்டெழுத்தின் மேற்புரியச்
சாதாரி நின்றறையுஞ் சார்ந்து.

எ-து தோழி தலைமகளைப் பருவங்காட்டி வற்புறுத்தியது.

இ-ள். வெங்கதிரோன் மேனோக்கிப் பருகியநீர் கீழ்நோக்குதலால் காடெல்லாம் ஒக்கங்கொண் டழகாகப் போதுதோறும் அரிவண்டுகள் நெட்டெழுத்தோசைமேல் மேவிச் சாதாரியென்னும் பண்ணினைச் சார்ந்தொலியா நின்றன; மானோக்கி இதனைக் காணாய்; எ-று.

அல்லதூஉம் 'போதாரி வண்டெலாம்' என்பது போதினைப்பார்ந்த இவ் வண்டெல்லாம் என்றவாறு. (௩)

௩௬. இருள்பரந் தாழியான் றன்னிறம்போற் றம்மு
னருள்பரந்த வாய்நிறம் போன்று—மருள்பரந்த
பால்போலும் வெண்ணிலவும் பையர வல்குலாய்
வேல்போலும் வீழ்துணையி லார்க்கு.

எ-து மாலைப்பொழுதுகண்டு ஆற்றளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். சக்கரத்தையுடைய மாயவனிறம்போல எங்கு மிருள் பரந்து, அம்மாயவன்முன்னோனுடைய நிறம்போன்று வியப்புமிக்க பானிறம்போன்ற வெண்ணிலாவும், பையரவல்குலாய்! இவை விரும்பப்படுந்துணையில்லாதார்க்கு வேல்போலும்; எ-று. (௪)

௩௭. பாழிபோன் மாயவன்றன் பற்றார் களிற்றெறிந்த
வாழிபோல் ஞாயிறு கல்சேரத்—தோழியோ
மான்மாலை தம்மு னிறம்போன் மதிமுளைப்ப
யான்மாலை யாற்றே னினைந்து.

இதுவுமது.

இ-ள். தனக்கு வலிபோலக் கருதி மாயோன் பற்றார்களிற்றின்முகத் தெறிந்த சக்கரம்போல ஞாயிறு குடமலையைச் சேரத் தோழி! மருண்மாலையின் கண் அம்மாயவன்முன்னோன் நிறம்போல மதி தோன்றுதலான் யான்கொண்ட மயலை ஆற்றமாட்டுகில்லேன் வருந்தி; எ-று. (௫)

௯௮. வீயும் வியப்புறவின் வீழ்துளியான் மாக்கடுக்கை
நீயும் பிறரொடுங்காணீடாதே—யாயுங்
கழலாகிப் பொன்வட்டாய்க் காராய் மடலாய்க்
குழலாகிக் கோல்சுரியாங் கூர்ந்து.

எ-து பருவமன்றென்று வற்புறுத்தியதோழிக்குத் தலைமகள் வன்புறையெதிரழிந்து சொல்லியது.

இ-ள். ஆயப்படுங் கழல்போல அரும்பிப் பொன்வட்டுப்போல முதிர்ந்து பின்னைப் பூமாலையாய் இதழாய்விரிந்து மடவார்குழல்போலக்காய்த்துப் பின்னைத் துளையையுடைய கோலாய் மிக்கு அழியாநின்றன, வியன்புறவின்கண்ணே வீழ்துளியானே பெருங்கொன்றைகள்: இதனைப் பிறரோடே நீ போய் நீயுங் காணாய் நீடியாதே; எ-று. (௬)

௯௯. பொன்வாளாற் காடில் கருவரை போர்த்தானு
மென்வாளா வென்றி யிலங்கெயிற்—றென்வாள்போல்
வாளிழந்த கண்டோள் வனப்பிழந்த மெல்விரலு
நாளிழந்த வெண்ணிக் கைநைந்து.

இதுவுமது.

இ-ள். பொன்போன்ற வெயிலொளியால் வெந்து காடின்றியிருந்த கருவரைகள் கார்ப்பருவஞ்செய்து மலரிதழ்களான் மூடப்பட்டாலும் அதனாற் பயனென்? பருவமன்றென்றுசொல்லி வாளாநின்றி; இலங்கெயிற்றை யுடையாய்! என் மேனியின்கண்ணுள்ள ஒளிபோல ஒளி யிழந்தன என் கண்களும்: போயிழந்தநாள்களினெண் மிகுதலான் எண்ணி என் விரல்களுந்தேய என்றோள்களும் வனப்பிழந்தன; எ-று.

இதனுள் வாளா என்பது பயனின்மையைக் காட்டுவதோர் இடைச்சொல். (௭)

௱. பண்டியையச் சொல்லிய சொற்பழுதான் மாக்கடல்
கண்டியைய மாந்திக்கால் வீழ்த்திருண்—டெண்டிசையுஞ்
சார்தோன்றக் காதலர் தேர்தோன்றா தாகவே
பீர்தோன்றி நீர்தோன்றுங் கண்.

எ-து பருவங்கண்டழிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

இ-ள். தா முன்பு நம்மைப் பிரிகின்றநாட் குறிப்படச்சொல்லிய சொற்பழுதாயிற்றால்: பெருங்கடற்சென்று கண்டு நிரம்பப்பருகிக் கால்வீழ்த்தே யிருண்டு திசையெட்டு மழைதோன்றக் காதலர் தேர் தோன்றுகின்றதில்லை: ஆதலால் என் கண்கள் பீர்தோன்றநீர்தோன்றுகின்றன; எ-று. (௮)

௧0௧. வண்டினம் வௌவாத வாம்பலும் வாரிதழான்
வண்டினம் வாய்வீழா மாலையும்—வண்டின
மாராத பூந்தா ரணிதேரான் றன்போத
வாராத நாளே வரும்.

இதுவுமது.

இ-ள். வண்டினங்கள் விரும்பாத *ஆம்பலென்னும் பெயரையுடைய குழலும், ஒழுகிய மலர்களிற்புக்கு வண்டினங்கள் வாய்வீழாத அந்தியாகிய மாலையும், வண்டினங்கள் புக்கொலியாத பூச்செயல்களையுமுடைய புரவிபூண்ட தார்மணிகளையுடைய புரவிகளாலே ஒப்பிக்கப்பட்ட தேரினையுமுடையான் வாராதநாளே வந்து என்னை நலியும்; எ-று. (௯)

௧0௨. மானெங்குந் தம்பிணையோ டாட மறிபுகள
வானெங்கும் வாய்த்து வளங்கொடுப்பக்—கானெங்குந்
தேனிறுத்த வண்டோடு தீதா வெனத்தோரா
தியானிறுத்தே னாவி யிதற்கு.

இதுவுமது.

இ-ள். மான்கள் தம்பிணைகளைக்கூடி எங்கும் விளையாட அவற்றின் மறிகளுறுகள மழையெங்கும்பெய்து வாய்த்து வளங்கொடுப்பக் காடெங்குந் தேன்களும் தம்மொடுசார்ந்த வண்டுகளோடு தீதாவென்றொலித்தலான், ஆராயாதே மயங்கிப் பருவத்துக் கென்னுயிரைக் கடனாகக்கொடுத்தேன்; எ-று. (௧0)

௧0௩. ஒருவந்த மன்றா லுறைமுகிரா நீராற்
கருமந்தான் கண்டழிவு கொல்லோ—பருவந்தான்
பட்டின்றே யென்றி பணைத்தோளாய் கண்ணீரா
லட்டினே னாவி யதற்கு.

எ-து பருவமன்றென்று வற்புறுத்தின தோழிக்குத் தலைமகள் பருவமேயென் றழிந்துசொல்லியது.

இ-ள். ஒருவந்தமன்றால் என்பது இது பருவமென்பது மெய்ம்மை யன்றாயிலென்றவாறு. உறைமுகிராநீரால் என்பது மழைபெயல் நிரம்பாத

* "கஞ்சத்தாற் குழுதவடிவாக அணைசுபன்னிச்செறித்தலின் ஆம்பற் குழலாயிற்று" என்பர் அடியார்க்குநல்லார் (சிலப்-ஆய்ச்சியர்குரவை).

நீராவென்றவாறு: வம்பமழை என்றவாறும். கருமந்தான் கண்டழிவுகொல்லோ என்பது கருமமாவது பருவமல்லாதபருவத்தைக்கண் டழிவதோ என்றவாறு. பருவந்தான் பட்டின்றே யென்பது பருவம் வந்துபட்டதில்லை என்றவாறு. என்றி என்பது இவையெல்லாஞ் சொல்லி என்னைத் தேற்றுகின்றாய் என்றவாறு. பணைத்தோளாய் கண்ணீரா லட்டினே னாவி யதற்கு என்பது கண்ணீரே நீராகவார்த்து என்னுயிரைப் பருவத்துக்குக் கொடுத்தேன் பணைத்தோளாய்! எ-று. (கக)

கOஉ. ஐந்துருவின் வில்லெழுதி நாற்றிசைக்கு முந்நீரை
யிந்துருவின் மாந்தி யிருங்கொண்மூ—முந்துருவி
னொன்றா யுருமுடைத்தாய்ப் பெய்வான்போற் பூக்கின்று
கொன்றாய்கொன் றாயெற் குழைத்து.

எ-து பருவங்கண்டழிந்த கிழத்தி கொன்றைக்குச் சொல்லுவாளாய்த் தோழிகேட்பச் சொல்லியது.

இ-ள். ஐந்துநிறத்தினையுமுடைய வில்லையெழுதினாற்போலக் கோலி முந்நீரைப்பருகி ஈந்தின்கனிபோன்றநிறந்துகின்ற வுருவொடு இருங்கொண்மூ நாற்றிசைக்கண்ணும் ஒன்றா யுருமுடைத்தாய்ப் பெய்யப்படுகின்றனவானம் என்னைக்கொல்கின்றாற்போலத் தழைத்தும் பூப்பேனென்று என்னைக்கொன்றாய்; கொன்றைமரமே! எ-று. (கஉ)

கOங. எல்லை தருவான் கதிர்பருகி யீன்றகார்
கொல்லைதரு வான்கொடிக ளோடுவகான்—முல்லை
பெருந்தண் டளவொடுதங் கேளிரைப்போற் காணாய்
குருந்தங் கொடுங்கழுத்தங் கொண்டு.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். பகலினைத்தருங் கதிரோனுடைய கதிர்கள் நீரை மிலத்தின்கட் பருகி யீன்ற காரானே கொல்லைகள் தருகின்ற வாலிய கொடிகண் மரந்தோறுஞ் சென்றேறுவனவற்றைக் காணாய்! அன்றியேயும் முல்லைகள் பெருந்தண்டளவுடனே குருந்தங் கொடுங்கழுத்தங்கொண்டு தங்கேளிரைப்போ லேறுவன காணாய்! எ-று. (கங)

கOச. என்னரே யேற்ற துணைப்பிரிந்தா ராற்றென்பா
ரன்னரே யாவ ரவரவர்க்கு—முன்னரே
வந்தாரந் தேங்கா வருமுல்லை சேர்தீந்தேன்
கந்தாரம் பாடுங் களித்து.

எ-து வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் வன்புறையெதிரழிந்துசொல்லியது.

இ-ள். என்னரே யேற்ற துணை பிரிந்தார் என்பது எப்பெற்றியர் அவர் தமக்கன்புபட்ட காதலரைப்பிரிந்தார் என்றவாறு. ஆற்றென்பா ரன்னரேயாவரவர்க்கு என்பது அக்காதலித்தாரைப் பிரிந்தாரோ டொப்பர், பிரியப்பட்டார்க் காற்றி இறந்துபடாதிருக்கச் சொல்லுவார் என்றவாறு. முன்னரே வந்தாரந் தேங்கா வருமுல்லை சேர்தீந்தேன் கந்தாரம்பாடுங் களித்து என்பது எனக்கு முன்னேவந்து சந்தனப் பொழிலையும் தேங்காவின்கண்வளர் முல்லைகளையுஞ் சேர்ந்த தீந்தேன்கள் கந்தாரமென்னும் பண்ணினைக் களித்துப் பாடாநின்றன; எ-று. (௧௪)

௧௪௭. கருவுற்ற காயாக் கணமயிலென் றஞ்சி
யுருமுற்ற பூங்கோட லோடி—யுருமுற்ற
வைந்தலை நாகம் புரையு மணிக்கார்தா
னெந்தலையே வந்த தினி.

எ-து பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

இ-ள். கருக்கொண்டு பூத்த காயாம்பூவினைத் தொகுதியையுடைய மயிலென்றஞ்சி உருமுற்ற ஐந்தலைநாகங்கள் உருமுற்ற பூங்கோடல்களை யொவ்வாநின்ற அழகிய இக்கார்ப்பருவந்தான், எம்முடையமாட்டே நலியவந்தது இப்பொழுது ; எ-று. (௧௫)

௧௪௮. கண்ணுள வாயின் முலையல்லை காணலா
மெண்ணுள வாயி னிறவாவா—லெண்ணுளவா
வன்றொழிய நோய்மொழிச்சார் வாகா துருமுடைவா
னொன்றொழிய நோய்செய்த வாறு.

எ-து பருவம் அன்றென்று வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் ஆற்றாது சொல்லியது.

இ-ள். உருமுடைவான் ஒன்றொழிய நோய்செய்தவாறு கண்ணுளவாயின் முல்லையல்லை காணலாம் என்பது உருமுடைய வான் *இறந்துபாடொன்றையும் ஒழிய மற்றைக் குறிப்புக்கள் ஒன்பதும் எனக்குளவாம்படி

* இவற்றைத் தசாவத்தை என்ப வடநூலார். அவை அன்பொடுபார்த்தல், உளங்கொடுபெற்றல், புணர்வுவேட்கை, துயிலறுதல், மெலிதல், புலநகர்வொழிதல், நாணழிதல், புலம்பல், மயக்கம், இறந்துபடுதல் என இவை.

என்னை நோய்செய்தவாற்றை நினக்குங் கண்ணுளவாயின் *முல்லையலலை யாதலின் நக்குக்காண் எ-று. எண்ணுளவாயின் இறவாவால் என்பது அவர் குறித்த இத்துணைநாளுள் வருகின்றேன் என்ற எண் பழுதுபடாவாயின் அவர் சொன்னநாளைக் கடவா அன்றே எ-று. எண்ணுளவாவன்றொழிய நோய் மொழிச் சார்வாகாது என்பது என்னை ஆற்றுவிக்கவேண்டி நின் மனத்தின்கண் எண்ணின, எண்ணின்கணுள்ளவாவன்றி என்றேயொழிதற்கு நீ யாற்றுவிக்கின்ற நின்மொழி எனக்குச் சார்வாகாது ; எ-று. (௧௬)

௧0௬. என்போ லிருளை யிருங்கடன் மாந்தியகார்
பொன்போற்றார் கொன்றை புரிந்தன—பொன்போற்
றுணைபிரிந்து வாழ்கின்றார் தோன்றுவர் தோன்றா
ரிணைபிரிந்து வாழ்வ ரினி.

எ-து பருவங்கண்டு ஆற்றளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். என்னைப்போன்றதோழி! பொன்போன்ற தார்களைக் கொன்றைகள் ஈனும்வகை இருங்கடலைப்பருகின முகில்களாதலாற் பொன்போலப் பெறுதற்கரிய தந்துணைகளைப் பிரிந்துபோய் வாழ்கின்றார் அத்துணைக்கண் மாட்டுத்தோன்றுவர் ; நம்மோடிணைதலைப்பிரிந்துவாழ்கின்றார் இப்பருவத்தின் கண்ணுந் தோன்றுகின்றிலர் ; எ-று. (௧௭)

௧௧0. பெரியார் பெருமை பெரிதே யிடர்க்கா
ணரியா ரெளியரென் றாற்றாப்—பரிவாய்த்
தலையழுங்கத் தண்டளவந் தாநகக்கண் டாற்றா
மலையழுத சால மருண்டு.

இதுவுமது.

இ-ள். பெரியாராயிருப்பார் பெருமைக்குணம் மெய்ம்மையாகப் பெரிதே; காணமுன் னரியாராயுள்ளார் இடர் வந்த இப்பொழுது எளியராயினரென் றிரங்கி யழுங்கி ஆற்றுவாய் மலைகள் மிகவும் அழுதன, தலைசாய்க்கும் வகை பரிவாய்த்தண்டளவங்கள் தஞ்சிறுமையால் நகக்கண்டு ; எ-று. (௧௮)

---

* முல்லை கண்ணிலவாதலின் என்னை நோய்செய்தவாற்றைக் காணாது நகுவன. நீயும் அதுபோல நகுவையேனும் கண்ணுண்மையால் முல்லை யலலை யாதலின், நக்கே யொழியாது நோய்செய்தவாற்றைப் பார்த்தலும் செய்க ; எ-று. 'தண்டளவந்தாநகக்கண்டு' என்பர் முன்னும்.

கானங் கடியரங்காக் கைம்மறிப்பக் கோடலார்
வானம் விளிப்பவண் டியாழாக—வேனல்
வாரா மயிலாட வாட்கண்ணாய் சொல்லா
யுளாராகி யுய்யும் வகை.

இதுவுமது.

இ-ள். கானங் கடியரங்காகக் கோடலார் வியந்து கைம்மறிப்ப, முகில் விளிப்ப, வண்டுகள் யாழாக வேனற்காலத்துக்களியாத மயில் களித்தாடாநிற்க வாட்கண்ணாய்! சொல்லாய்; காதலரைப்பிரிந்தார் இறந்துபடாது உளராகி யுய்யுந் திறத்தை; எ-று. (௧௧)

௧௧௨. தேரோன் மலைமறையத் தீங்குழல் வெய்தாக
வாரான் விடுவானோ வாட்கண்ணாய்—காரார்
குருந்தோடு முல்லை குலைத்தனகா ணாமும்
விருந்தோடு நிற்றல் விதி.

எ-து பருவங்காட்டித் தோழி தலைமகளை வற்புறுத்தியது.

இ-ள். பகலோன் மலையின்கண் மறைய இனியகுழல் இன்னாதாய் வெய்தாக இக்காலத்தின்கண் வாரோதேவிடுவானோ; வாட்கண்ணாய்! பசுமையார்ந்த குருந்துடனே முல்லைகள் பூங்கொத்தை ஈன்றனகாண்; இனி நாமும் அவர்க்கு விருந்துசெய்தல் ஒழுகிநிற்றல் நெறி; எ-று. (௨௦)

௧௧௩. பறியோலை மேலோடு கீழா விடையர்
பிறியோலை பேர்த்து விளியாக் கதிப்ப
நரியுளையும் யாமத்துந் தோன்றாரா லன்னாய்
விரியுளைமான் றேர்மேல்கொண் டார்.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். படுத்துத்துயிலும் பறி* கீழாக ஓலைப்படன் மழைத்துளியைக் காத்தற்கு மேலாக இடையர்கள் கிடந்து யாடுகளைப் பிறித்தற்குக் கருவியாகிய பிறிபோலையைப் புடைபெயர்வித்து அழைத்துறப்ப, நரிகள் அஞ்சிக் கதறும்

* 'பறியோலைச்சயனத்தர்' எனப் பெரியாரும் பணித்தார். (பெரியாழ்வார் திருமொழி, வண்ணமாடங்கள், ௫) 'மறித்தருத் தொகுத்த பறிப்புற விடையன்' என அகநானூற்றினும் (௯௪) 'பறிப்புறத் திட்ட பாலொடை யிடையன்' என நற்றிணையினும் (௧௪௨) வருதல் காண்க.

யாமத்தின்கண்ணுந் தோன்றாராற் றோழி! விரிந்தவுளையையுடைய மாவாற் பூட்டப்பட்ட தேரை மேல்கொண்டுபோயினர்; எ-று. (உ-க)

கககச. பாத்துப் படுகடன் மாந்திய பல்கொண்மூக்
காத்துக் கணைதுளி சிந்தாமைப்—பூத்துக்
குருந்தே பருவங் குறித்திவளை நைந்து
வருந்தேயென் றாய்நீ வரைந்து.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள்கேட்பத் தோழி குருந்தொடார்த் திர்த்துச் சொல்லுவாளாய்ப் பருவமன்றென்று வற்புறுத்தியது.

இ-ள். ஒலிக்கின்ற கடலைப்பருகி அந்நீரைக் காத்துக் கருமுற்றிப் பருத்துச் செறிந்த துளிகளைச் சொரிவதற்குமுன்பே பூத்துக் குருந்தே! பருவத்தைக் குறித்துக்காட்டி இவளையேவரைந்து வருந்துவாய் என்றாய் நீ; எ-று. (உ-உ)

கககரு. படுந்தடங்கட் பல்பணைபோல் வான்முழங்கன் மேலுங்
கொடுந்தடங்கட் கூற்றமின் னாக—நெடுந்தடங்கண்
ணீர்நின்ற நோக்கி நெடும்பணைமென் றோளாட்குத்
தேர்நின்ற தென்னாய் திரிந்து.

எ-து வினைமுற்றிமீண்ட தலைமகன் தலைமகட்குத் தூதுவிடுகின்றான் முட்டிற்றுச் சொல்லியது.

இ-ள். ஒலியாநின்ற தடங்கண்ணையுடைய பல முரசுபோல் முகில்கள் முழங்குவதன்மேலும் மின்னே கொடியதடங்கண்ணினையுடைய கூற்றமாக அழுகின்றநீர் விடாதுநின்ற நெடுந்தடங்கண்ணோக்கினையுடைய நெடும்பணை மென்றோளாட்கு நீமறித்துவந்து நின்மனைவாயிலின்கண்ணே அவன்றேர் நின்றதென்று சொல்லுவாய், எமக்குமுன்னேசென்று தூதாக; எ-று. (உ-ரு)

கககசு. குருந்தே கொடிமுல்லாய் கொன்றாய் தளவே
முருந்தே யெயிற்றொடுதார் பூப்பித்—திருந்தே
யரும்பீர் முலையா ளணிகுழலும் வெய்த்தோள்
பெரும்பீர் பசப்பித்திர் பேர்ந்து.

எ-து பருவங்கண்டு ஆற்றாளாயதலைமகள் ஆற்றல்வேண்டித் தோழி தான் ஆற்றாளாய்ச்சொல்லியது.

இ-ள். குருந்தே! கொடிமுல்லாய்! கொன்றாய்! தளவே! பீலிமுருந்தினை யொக்கும் இவளெயிற்றுடனே பூமாலையையும் பூப்பித்திருந்து கோங்கரும்பு

..தலாயினவற்றை வென்று சிதைக்கும் முலையினையுடையாளுடைய குழ ..ந்த நிறைந்த வேய்த்தோள்களைப் பெரும் பீர்நிறம்போலப் பசப்பித்திர் ..; எ-று. (உச)

௧௧௭. கதநாகம் புற்றடையக் காரேறு சீற
மதநாக மாறு முழங்கப்—புதனாகம்
பொன்பயந்த வெள்ளி புறமாகப் பூங்கோதா
யென்பசந்த மென்றோ ளினி.

எ-து தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

இ-ள். சினத்தினையுடைய பாம்புகளும் புற்றினை அடையும்வகை உரு ..று வெகுண்டிடிப்ப, மதத்தையுடைய யானைகள் அவ்வுருமேற்றுக்கு எதிரே முழங்கப், புதலாற்சூழப்பட்ட நாகமரங்கள் வெள்ளிபோலும் இதழ்கள் புறஞ் சுற்றப் பொன்போலுந்தாதுக்களை உள்ளே பயந்தனவாதலாற் பூங்கோதாய்; நின்மென்றோள்கள் யாதுகாரணத்தாற் பசந்தன இப்பருவத்து; எ-று. (உ௫)

௧௧அ. கார்தோன்றிப் பூவுற்ற காந்தண் முகைவிளக்குப்
பீர்தோன்றித் தூண்டுவாண் மெல்விரல்போ—னீர்தோன்றித்
தன்பருவஞ் செய்தது கானந் தடங்கண்ணா
யென்பருவ மன்றென்றி யின்று.

எ-து பருவம் அன்றென்று வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் வன்புறை யெதிரழிந்து சொல்லியது.

இ-ள். விளக்கு மழுங்கிப் பீர்நிறங்கோடலான் அவ்விளக்கினைத்தூண்டு வாள் மெல்விரலினைத் தோன்றிப்பூவின்மேற் சென்றன காந்தண்முகைகள் போலும்வகை கார்நீர்தோன்றுதலாற் காரின்பருவத்தைச் செய்தன கானங்கள், இத்தைக்கண்டும் தடங்கண்ணாய்! எனக்குக் காதலர் சொல்லிய பருவம் அன் றென்னுதின்றி; எ-று. (உ௬)

௧௧௯. உகவுங்கா ரன்றென்பா ரூரா ரதனைத்
தகவுந் தகவன்றென் றோரேன்—றகவேகொல்
வண்டுடுப்பாய்ப் பாம்பாய் விரலாய் வளைமுரியாய்
வெண்குடையாந் தண்கோடல் வீந்து.

இதுவுமது.

இ-ள். மழைத்துளிகள் உகவுங் கார்ப்பருவம் அன்றென்றுசொல்லா ..ன்றார் இவ்வூரார்: அச்சொலவுதான் அவூர்க்குக் குணமோ குற்றமோ என்ப

தறியேன் : அதுதான் அவர்க்குக் குணமேகொல்லோ ! வளவிய தூடுப்பாய்ப் பாம்பாய் விரலாய் வளை முரியாய் வெண்குடையாகாநின்றது தண்கோட லழிந்து; எ-று. (உஎ)

கஉ0. பீடிலா ரென்பார்கள் காணூர்கொல் வெங்கதிரோற்
கோடெலாம் பொன்னாக் கொழுங்கடுக்கைக்—காடெலா
மத்தங் கதிரோன் மறைவதன்முன் வண்டொடுதேன்
றுத்த மறையுந் தொடர்ந்து.

இதுவுமது.

இ-ள். நம்மைப் பெருமையிலரென்று சொல்லுவார் காணுதாராகாரோ ! வளவிய கொன்றைகள் கொம்பெல்லாம் பொன்னாகப் பூக்க வண்டொடு தேன்கள் துத்தம் என்னும் பண்ணினைத் தம்முட் பொருந்தி ஒலியாநின்றன காடெல்லாம்; வெய்யகதிரோடுகூடி வெங்கதிரோன் அத்தமலையை அடைதற்கு முன்னே; எ-று. (உஅ)

கஉக. ஒருத்தியா னொன்றல பல்பகை யென்னை
விருத்தியாக் கொண்டன வேறாப்—பொருந்தின்
மடலன்றின் மாலை படுவசி யாம்பல்
கடலன்றிக் காரூர் கறுத்து.

இதுவுமது.

இ-ள். யானொருத்தி: எனக்கு ஒன்றல்ல பலபகைகள் என்னை மலைத்தலை தமக்கு ஒழுக்கமாகக்கொண்டன ; வேறாகத் துணையைப் பிரிந்து பொருந்தின் மடற்பனைமேலிருந்த அன்றில், மாலைப்பொழுது, மழைபெயல், ஆம்பற்குழல், கடல் அன்றியே முகில்கள் என்று சொல்லப்பட்ட இவையெல்லாம் மேல் வெகுண்டு; எ-று. (உக)

கஉஉ. கானந் தலைசெயக் காப்பார் குழற்றோன்ற
வேன மிடந்த மணியெதிரே—வான
நகுவதுபோன் மின்னிட நாணவென் னாவி
யுகுவது போலு முடைந்து.

இதுவுமது.

இ-ள். காடுகள் தழைத்துத் தலைபெயடுக்க ஆயர் ஊதுங் குழலோசை தோன்ற வனங்கள் இடந்த மணிகளினெதிரே முகில்கள் சிரிப்பதுபோல மீன்கள் ஒளிவிட இக்காலத்தும் இறந்துபடாமையான் நாணில்லாத என்னுயிர் ஒழுகுவதுபோலவுளது; எ-று. (ங0)

௬௩. இம்மையாற் செய்ததை யிம்மையே யாம்போலு
மும்மையே யாமென்பா ரோரார்கா—ணம்மை
யெளிய ரெனநலிந்த வீர்ங்குழலா ரேடி
தெளியச் சுடப்பட்ட வாறு.

எ-து குறித்த பருவத்தின்கண் வந்த தலைமகனைப் புணர்ந்திருந்த தலைமகள் முன்பு தன்னை நலிந்த குழலோசை அந்திமாலைப்பொழுதின்கட் கேட்டதனற் றுயருறநாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். இப்பிறப்பின்கட் செய்த தீவினை இப்பிறப்பின்கண்ணே விளையும்போலும்! மறுபிறப்பின்கண் ஆம் என்பார் அறியாதார்காண்; முன்பு நம்மை எளியரெனக்கொண்டு துயர்செய்த ஈர்ங்குழலார், தோழி! எல்லாரும் அறியச் சுடப்பட்டவாற்றைப் பாராய்; எ-று.

குழல்நலிவது நெருப்பாற் சுடப்பட்டுத் துளைப்பட்டபின்: குடுண்டது பிறரை நலிந்ததாற் பயனென்று குழலைச்சொல்லுமாறென்னையெனிற் பிறரை நலியுந்தன்மை முன்பே அதற்குளதாதலாற் பட்டதெனக்கொள்க. (௬௩)

முல்லை முற்றியது.

ரு.—மருதம்.

௬௪. செவ்வழியாழ்ப் பாண்மகனே சீரார்தேர் கையினு
லிவ்வகை யீர்த்துய்ப்பான் றேன்றுமு—னிவ்வழியே
யாடினு னய்வய லூரன்மற் றெங்கையர்தோள்
கூடினன் பின்பெரிது கூர்ந்து.

எ-து பாணற்குத் தலைமகள் வாயின்மறுத்தது.

இ-ள். செவ்வழியாழையுடைய பாண்மகனே! சீரார்ந்த விளையாட்டுத் தேரினைத் தன் கையால் இம்மனையின்கண் ஈர்த்து நடத்துகின்ற என்மகன் பிறப்பதற்குமுன் இம்மனையின்கட் பிரியாது ஆய்வயலூரன் ஒழுகினன், பின்னையெல்லாம் எங்கையர்தோளே மிக விரும்பி முயங்கினன்; ஆதலான் இப்பருவம் யாம் அவர்க்குத்தக்கேம் அல்லேம்; எ-று. (க)

௬௫. மாக்கோல்யாழ்ப் பாண்மகனே மண்யானைப் பாகனுர்
தூக்கோற் றுடியோடு தோன்றுமுன்—றூக்கோற்
றொடியுடையார் சேரிக்குத் தோன்றுமோ சொல்லாய்
கடியுடையேன் வாயில் கடந்து.

இதுவுமது.

இ-ள். அழகிய *காம்பையுடைய யாழ்ப்பாணனே! மண்ணுற் செய்யப்பட்ட யானைப்பாகராகிய என்மகனுர் தாங்கொட்டுகின்ற தூக்கோற்றுடியோடு இங்குத்தோன்றி ஒழுகுவதற்குமுன்பு தூய புரிப்புச் செயல்களையுடைய தொடியுடையார்மனையின்கட்சென்று தோன்றியொழுகுமோ சொல்லாய் இப்பொழுது அவனுல் வரையப்பட்ட வாழ்வினையுடையேன் வாயில்கடந்து; எ-று. (உ)

கஉரு. விளரியாழ்ப் பாண்மகனே வேண்டா வழையேன்
முளரி மொழியா துளரிக்—கிளரிநீ
பூங்கண் வயலூரன் புத்தில் புகுவதன்மு
ளுங்க ணறிய வுரை.

இதுவுமது.

இ-ள். விளரி யென்னும் பண்ணைச் செய்கின்ற யாழையுடைய பாண்மகனே! யாங்கள் விரும்பாதன அழையாதொழிக: எங்கண்மாட்டு நினக்கு ஈரமில்லாத முளரிபோன்ற மொழிகளைச் சொல்லாது இங்கு நின்றும் புடைபெயர்ந்து கிளர்ந்து நீபோய்த் தாமரைப்பூப்போன்ற கண்களையுடைய வயலூரான் இன்று புதுமனையின்கண்ணே புகுவதன்முன் அப்புதுமனைக்கண் நீ சென்று வாராநின்றான் என்று அவனுற் காதலிக்கப்பட்ட பரத்தையர்க்கு உரை; எ-று. (ங)

கஉஎ. மென்கட் கலிவய லூரான்றன் மெய்ம்மையை
யெங்கட் குரையா தெழுந்துபோ—யிங்கட்
குலங்கார மென்றணுகான் கூடுங்கூர்த் தென்றே
யலங்கார நல்லார்க் கறை.

இதுவுமது.

இ-ள். மெல்லிய இடத்தையுடைய மிக்க வயலூரனுடைய மெய்யுரைகளை எங்கட்குச் சொல்லாதே இங்குநின்று மெழுந்துபோய் இவ்வுலகத்தின்கட் குலமுடைய மனையாளைப் புணர்தல் †..
....(ச)

---

* பாணர் தம் பிறப்புணர்த்தற்கு ஓர்வகை மூங்கிற்கோல் கைக்கோடல் பண்டைவழக்கு: இதனை "நுண்கோல் கொண்டு களம்வாழ்த்து மகவன் பெறுகமாவே" (ரு-ங) என்னும் பதிற்றுப்பத்துரையா னுணர்க; 'இருங்கழை யிறும்பி னெய்ந்துகொண்டறுத்த, நுணங்குகட் சிறுகோல் வணங்கிறை மகளிரோ, டகவுநர்' (கஎ) என்றார் அகநானூற்றினும்.

† இதன் பின்னுரையும், இனிவரும் பாடல்களினுரையும் பிரதிகளிலில்லை. சிலபாடல்களிலும் எழுத்துக்கள் விடுபட்டும் பிறழ்ந்தும் கெடுப்பன.

கஉ. அ. செந்தா மரைப்பூ வுறங்கியிர்ந்த செங்நெல்லின்
பைந்தார்ப் புனல்வாய்ப்பாய்க் தாடுவா—ளந்தார்
வயந்தகம்போற் ரோன்றும் வயலூரான் கேண்மை
நயந்தகன் றற்றமை நன்று. (ரு)

கஉ. கூ. வாடாத தாமரைமேற் செந்நெற் கதிர்வணக்க
மாடா வரங்கினு ளாடுவா—ளீடாய
புல்லக பேய்க்கும் புகழ்வய லூரான்ற
னல்லகஞ் சேராமை நன்று. (சு)

கங. 0. இசையுரைக்கு மென்செய் திரங்கின் றவரை
வசையுரைப்பச் சால வழுத்தீர்—பசைபொறை
மெய்ம்மருட் டொல்லா மிதுபுன லூரான்றன்
பொய்ம்மருட்டுப் பெற்ற பொழுது. (எ)

கங. க. படங்கிறவு போலும்யாழ்ப் பண்பிலாப் பாண
தொடக்குறவு சொற்றுணிக்க வேண்டா—*முடங்கிறவு
பூட்டுற்ற வில்லேலைப்க்கும் பூம்பொய்கை யூரன்பொய்
கேட்டுற்ற கிழ்நாட் கிளர்ந்து. (அ)

கங. உ. எங்கை யரிலுள்ளா னேபாண நீபிறர்
மங்கையரி லென்று மயங்கினுய்—மங்கையரி
லென்னு திறவா திவணின்னி................
பின்னுரி லந்தி முடிவு. (கூ)

கங. ங. பாலையாழ்ப் பாண்மகனே பண்டுநின் னுயகற்கு
மாலையா ழோதி வருடாயோ—காலையாழ்
செய்யு மிடமறியாய் சேந்தாநின் பொய்ம்மொழிக்கு
நையு மிடமறிந்து நாடு. (கo)

---

* 'இறவுக்கலித்துப், பூட்டறு வல்லிலிற் கூட்டுமுதற் றெறிக்கும்' (கசு) என அகநானூற்றினும் 'புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச், செவ்வரிக் கய லொடு பச்சிறாப் பிறழும்' எனப் பெரும்பாணாற்றுப்படையினும் வருதல் காண்க.

கரு௪. கிழமை பெரியோர்க்குக் கேடின்மை கொல்லோ
பழமை பயனோக்கிக் கொல்லோ—கிழமை
குடிநாய்கர் தாம்பல பெற்றாரிற் கேளா
வடிநாயேன் பெற்ற வருள். (கக)

கருரு. என்கேட்டி யேழா யிருநிலத்தும் வானத்து
மென்கேட்டுங் கண்டு முடிவறியேன்—பின்கேட்
டணியிகவா நிற்க வவனணங்கு மாதர்
பணியிகவான் சாலப் பணிந்து. (கஉ)

கருசு. எங்கை யியல்பி னெழுவல்யாழ்ப் பாண்மகனே
தங்கையும் வாயு மறியாம—லிங்க
ணுளார வுளா வவனோடிச் சால
வளார வளர்ந்த வகை. (கரு)

கருஎ. கருங்கோட்டுச் செங்க ணெருமை கழனி
யிருங்கோட்டு மென்கரும்பு சாடி—வருங்கோட்டா
லாம்பன் மயக்கி யணிவளை யார்ந்தழகாத்
தாம்ப லசையின *வாய்த் தாழ்ந்து. (க௪)

கருஅ. கன்றுள்ளிச் சோர்ந்தபால் காலொற்றித் தாமரைப்பூ
வன்றுள்ளி யன்னத்தை யார்த்துவான்—சென்றுள்ளி
வந்தையா வென்னும் வகையிற்றே மற்றிவ
னெந்தையார் தம்மூர்த் தகை. (கரு)

கருகூ. மருதோடு காஞ்சி யமர்ந்துயர்ந்த நீழ
லொருதோ டுழல்கின்ற ரோதை—குருகோடு
தாராத்தோ ருப்ந்தெடுப்புந் தண்ணங் கழனித்தே
யூராத்தே ரான்றந்தை யூர். (கசு)

க௪0. மண்ணார் குலைவாழை யுட்டொடுத்த தேனமதேன்
றுண்ணப்பூந் தாமரைப் பூவுள்ளுங்—கண்ணா
வயலூரான் வண்ண மறிந்து தொடுப்பாண்
மயலூ ரவர் மகள். (கஎ)

---

* 'வாய் தாழ்ந்து' பி-ம்.

௧௭௩. அணிக்குரன்மே னல்லாரோ டாடினே னென்ன
மணிக்குரன்மேன் மாதரா ளூடி—மணிச்சிரல்
பாட்டை யிருந்தயரும் பாய்நீர்க் கழனித்தே
யாட்டை யிருந்துறையு மூர். (௧௮)

௧௭௪. தண்கயத்துத் தாமரைநீள் சேவலைத் தாழ்பெடை
புண்கயத் துள்ளும் வயலூர—வண்கயம்
போலுநின் மார்பு புனிவேட்கைத் தொன்றிவண்
மாலுமா றுநோய் மருந்து. (௧௯)

௧௭௫. நல்வய லூர னறுஞ்சாந் தணியகலம்
புல்லிப் புடைபெயரா மாத்திரைக்கட்—புல்லியார்
கூட்டு முதலுறையுங் கோழி துயிலெடுப்பப்
பாட்டு முரலுமாம் பண். (௨௦)

௧௭௬. *ஆரத்த முடீஇ யணிபழுப்பப் பூசிச்
சிரந்தைபாற் செங்கழுநீர் சூடிப்—பாத்தை
நினைநோக்கிக் கூறினு நீமொழிய லென்று
மனைநோக்கி மாண விடும். (௨௧)

௧௭௭. பாட்ட ரவம்பண் ணரவம் பணியாத
கோட்டாவ மின்னிவை தாங்குழமக்—கோட்டரவ
மந்திரங் கொண்டோங்க லென்ன மகச்சுமந்
திந்திரன்போல் வந்தா னிடத்து. (௨௨)

௧௭௮. மண்கிடந்த வைய.......மற்றுப் பெரியார
பெண்கிடந்த நாளா னிகழ்ந்தொழுகப்—பெண்கிடந்த
தன்மை யொழியத் தாள மூலையினன்
மென்மைசெய் திட்டாண் மிக. (௨௩)

௧௭௯. செங்கட் கருங்கோட் டெருமை சிறுகனையா
லங்கட் கழனிப் பழனம்பாய்ந்—தங்கட்
குவளையம் பூவொடு செங்கயன்மீன் சூடித்
தவளையுமேற் கொண்டு வரும். (௨௪)

---

* 'இது தோழி செவ்வணியணிந்துவிட்டமை தலைவன்பாங்காயினர் கூறியது' என்றார் நச்சினார்க்கினியர் (தொல். பொ. கற். ௩௭).

௧௪௮. இருணடந் தன்ன விருங்கோட் டெருமை
மருணடந்த மாப்பழன மாந்திப்—பொருணடந்த
கற்பேருங் கோட்டாற் கனைத்துத்தங் கன்றுள்ளி
நெற்போர்வு சூடி வரும். (௨௫)

௧௪௯. புண்கிடந்த புண்மனுநின் னீத்தொழுகி வாழினும்
பெண்கிடந்த தன்மை பிறிதரோ—........கிடந்து
செய்யாத மாத்திரையே செங்கயல்போற் கண்ணினு
ணையாது தானுனு மாறு. (௨௬)

௧௫௦. கண்ணுங்கா லெங்கொல் கலவையாழ்ப் பாண்மகனே
யெண்ணுங்கான் மற்றின் றிவளொடுநே—ரெண்ணிற்
கடல்வட்டத் தில்லையாற் கற்பெயர் சேரா
ளடல்வட்டத் தாருளரே லாம். (௨௭)

௧௫௧. சேறுடுங் கிண்கிணிக்காற் செம்பொன்செய் பட்டத்து
நீறுடு மாயதிவ னின்முறை—வேறாய
மங்கையரி னுடுமோ மாக்கோல்யாழ்ப் பாண்மகனே
யெங்கையரி னுடலா மின்று. (௨௮)

௧௫௨. துலையாலும் பூணூலு *முன்கட்டாஞ் சேர்ந்த
விலையாலு மிட்ட குறிபை—யுலையாது
நீர்சிதைக்கும் வாய்ப்புதல்வ னிற்கு முனைமுலைப்பா
ஞர்சிதைக்கும் வேண்டா தழூஉ. (௨௯)

௧௫௩. துனிபுலவி யூடலி னோக்கேன் றொடர்ந்த
கனிகலவி காதலினுங் காணேன்—முனிவகலி
ஞண நடக்கு நளிவய லூரனைக்
காணவெப் போதுமே கண். (௩௦)

மருதம் முற்றியது

முனிந்தார் முனிவொழியச் செய்யுட் கண்மூத்துக்
கனிந்தார் களவியல் கொள்கைக்—கனிந்தா
ரிணைமாலை யீடிலா வின்றமிழால் யாத்த
திணைமாலை கைவரத் தேர்ந்து.

திணைமாலைநூற்றைம்பது மூலமும் உரையும்
முற்றின.

---

* 'முன்கடஞ் சேர்ந்த' பி-ம்.

(௨௫)

ஸ்ரீ:

(௨௬)

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௪0	௨௭	வினவேப்கை	வினவேங்கை
௨௧	௨௭	குறுங்தே	குருந்தே
௫௭	௧௫	வானேகரும்	வானெக்கும்
௪௬	௨௫	கூடுங்கூர்த்	கூடுங்கூத
௪௭	௨௪	சேந்தாநின்	சேர்ந்தாய்நின்
௪௯	௨௭	லங்கட்	வங்கட்
௫௰	௬	புண்மனுநின்	புண்மேனு
,,	௧௮	குலையாலும்	மூலையாலும்

(௨௭)

(௨௮)

(௨௯)

(௩௦)